
www.padippakam.com

உழைக்கும்

# மக்கள் தமிழகம்

3-11
சிலை - தி.பி. 2032
(திசம்பர் - 2001)
விலை : உ.ரூ. 5.00



“உலக பயங்கரவாதத்தின் தாயகம் அமெரிக்காதான் என்பதை வரலாறு தொடர்ந்து மெய்ப்பித்து வந்திருக்கிறது. அமெரிக்கக் கொடியில் உள்ள விண்மீன்களையும், கோடுகளையும் அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக மண்டை ஓடுகளையும், குறுக்கே வைக்கப்படும் எலும்புகளையும் இடம் பெறச் செய்யலாம்.”

– அமெரிக்க எழுத்தாளர் மார்க்டுவைன்

தமிழக அரசியல் பண்பாட்டு விடுதலை மாத இதழ்

படிப்பகம்

www.padippakam.com

# இன்னும் இடியட்டும்!

இன்னும்
இடியட்டும்!
விண்ணைத் தொட்டவை
மண்ணைத் தொடட்டும்....!

இடிந்த எங்கள்
வாழ்க்கை
விடிவு காணும்வரை
இன்னும்
இடியட்டும்....!

ஹீரோசிமாவிலே - உன்
அணுகுண்டால்
செத்துமடிந்த
அப்பாவிகளின் ஓலம்....
இன்றும்..
கூனாய், குருடாய்
குறையாய்ப் பிறக்கும்
மக்களின் அவலம்...

இன்னும்
இடியட்டும்...!
உன் ஆதிக்கம்
அழியும்வரை...!

வியட்நாமில்
நெபாம்குண்டுகளால்
வெடித்துச்சிதறிய
மக்களின் ஓலம்....!

ஓடிய பிஞ்சுகளைப்
பொசுக்கிய அவலம்...!

உலக மக்களை
ஒடுக்கிப் பிழிந்த
திமிர்ந்த மாடிகள்
இன்னும்
வெடித்துச் சிதறட்டும்.....!

ஈராக்கில்
எண்ணெய் திருட
ஆக்கிரமித்து....

உணவை, மருந்தை
தடுத்து
மாண்ட
பிஞ்சுக் குழந்தைகளின்
கண்ணீர் துளிகளுக்கு
விடை

இன்னும்
இடியட்டும்....!

உன்
ஆக்டபசு பெண்டகன்
எரிந்து மடியட்டும்...!

உன்
வெள்ளைமாளிகை
கொள்ளைபோகட்டும்...!

உலகைச் சுரண்டிக்
கொழுத்த உன் திமிர்
கொழுந்து விட்டெரியட்டும்... !

போபாலில் - உன்
யூனியன் கார்பைடால்
மாண்டவர் துயரம்...
இன்னும்
எத்தனை .. எத்தனை
- கியூபா
- பெரு
- லிபியா
- ஈரான்
- சோமாலியா

மீண்டும்
ஆப்கானை நோக்கி - உன்
அரக்க நாக்குகள்
எலும்பும் சதையுமாய்
இரத்தம் குடிக்க
அலையும் அவலம்...

பாலைமண்ணில்
ஒட்டிய வயிரோடு
ரொட்டித் துண்டுக்காய்.....

கழுதையில் ஏறி
கண்ணீரோடு...

இடிந்த வீடும்
இல்லாத உடைமையும்...

நெஞ்சம் அடைக்க-
மண்ணைப் பிரிந்து...


பிறன் மண் நெருங்கி
அகதியாய் அலையும்
உயிர்களாய்.... அவர்கள்.

நீயோ....
வெறி கொண்டலையும்
நாய்களின் கூட்டாய்
குதறித் திரியும்
பணவெறிக் கூட்டம்.

அமெரிக்க
இந்திய
வெறிக் கூட்டமே
இன்னும்
இடியட்டும்..!

உங்களின் ஆதிக்கக்கோட்டை
அடியோடு அழியட்டும்..!
அடியோடு அழியட்டும்..!

- புகழ்



www.padippakam.com

# ஆப்கானிஸ்தான் அறிந்து கொள்ள வேண்டுவதும்! அணி திரள வேண்டுவதும்!!

ஆப்கானிஸ்தானம்.

இன்றைக்கு வல்லரசுகளையெல்லாம் நெருட்டிக் கொண்டிருக்கிற செய்தியாக இருக்கிறது.

பின்லேடனை எப்படி அழிப்பது? பயங்கரவாதத்தை எப்படி முறியடிப்பது? ஆப்கானில் எப்படித் தனக்குச் சாதகமான அரசாங்கத்தை அமர்த்துவது?

- என்று பலப்படியான குழப்பங்களோடு தம் அதிகாரப் பரவலைச் செய்கின்றன அந்த வல்லரசு நாடுகள்.

அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும், சீனாவிற்கும், இரஷ்யாவிற்கும் இடையில் பலப்பல முரண்பாடுகள் இருப்பினும், இந்தத் திட்டத்தில் அவை கூடி இருப்பதாக அறிவித்திருக்கின்றன.

கூட்டிணைந்து செயல்படுவதில் கூட வேறுபட்ட காரணங்களும், வேறுபட்ட நோக்கங்களும் கலந்திருக்கின்றன.

அமெரிக்கா இன்றைய தன் அதிகாரச் செல்வாக்கில் உள்ள முதன்மை நிலையைத் தக்க வைத்துக் கொள்ள எத்தனைக் கோடியையும் செலவழிக்கக் காத்திருக்கிறது.

செப். 11 அன்று அமெரிக்காவில் நடந்திருக்கிற மிகப் பெரும் தாக்குதலால் ஏற்பட்ட பொருளியல் இழப்புகள் அதிகமானவை என்றாலும், அதைவிட மிகப்பெரும் இழப்பு தனது சட்டாம்பிள்ளைத் தனத்தின் மீது விழுந்த அடியாகவே அமெரிக்கா கருதுகின்றது.

எனவே அது தனது அரசியல் வழி, பொருளியல் வழி, படையியல் வழி உள்ள அதிகாரத்தின் முதன்மை நிலையைத் தக்கவைத்துக் கொள்ள கடுமையான முயற்சிகளை மேற்கொள்கிறது.

அரசியல் வழி ஆப்கான் மீது தன் தாக்குதலையும், அரசு அதிகாரத்தை விரிவுபடுத்தும் போக்கையும் ஐ.நா. வழியே நியாயப்படுத்திக் கொண்டது அமெரிக்கா.

பொருளியல் வழி தன் போருக்குத் துணை நிற்கும் நாடுகளில் பொருளியல் தடை நீக்கம் செய்வது என்றும், தனக்குத் துணைநிற்காத நாடுகளுக்குப் பொருளியல் தடை செய்வது என்றும் தன் சட்டாம்பிள்ளைத் தனத்தைச் சொல்லுகிறது.

இந்த நோக்கத்திற்குப் பிற வல்லரசு நாடுகளையும் இணங்க வைப்பதற்கு அந்நாடுகளுக்கிடையில் வலிய வந்து உறவை மேற்கொள்ளுகிறது.

படைவழி வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த கூட்டமைப்பைச் (நேட்டோவைக்) கூட்டி அதில் உள்ள உறுப்பு நாடுகளைத் தம் போக்கிற்கு இணங்க வைத்திருக்கிறது. சீனாவில் நடந்த கூட்டமைப்பில் தாம் பெருமளவில் இறங்கிவந்து ஆப்கானுக்கு எதிரான செயல்பாடுகளுக்குச் சீனாவோ, இரஷ்யாவோ எதிர் நிலை எடுத்துவிடாதபடி பார்த்துக் கொண்டது.

அமெரிக்கா இத்தகைய போக்கில் தன்னுடைய முனைப்பைக் கொண்டிருக்கிற சூழலில், பிரிட்டன், ஜப்பான், இரஷ்யா, சீனா- ஆகிய நாடுகளும் தன் அதிகார வரம்புகளை அமெரிக்காவை ஒட்டியும் தற்காலிகமாகப் பிணைந்தும் சரிசெய்து கொண்டிருக்கின்றன.

32

உழைக்கும் மக்கள் தமிழகம்

தொடர்புக்கு :
'உழைக்கும் மக்கள் தமிழகம்'
57, இராசகோபால் தோட்டம்,
கருங்கல்பாளையம்,
ஈரோடு–3.

இதழ்க் குழு

பொழிலன்

இளங்கோவன்

செல்வி

செந்தழல்

மார்க்சு வேனில்



படிப்பகம்

www.padippakam.com

எதிராக நின்று பாக்கிஸ்தானையும், இந்தியாவையும் அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிற போக்கு அரசியல் வழி அவற்றைத் தம் அதிகார அரசியலுக்குக் கட்டுப் படுத்துவதையே காட்டுகின்றது.

அமெரிக்காவுக்கு இப்படியாகத் தமது ஆக்டோபசு கைகளை உலகம் முழுக்க விரித்து நிலை நிறுத்திக் கொண்டிருப்பது நோக்கமாக இருக்கிறது எனில், அந்த நாடுகளின் நோக்கம் அந்த

**அமெரிக்காவும் சரி, இந்தியாவும் சரி தடை செய்ததாக அறிவித்துள்ள இயக்கங்களில் மதச் சார்புடைய இயக்கங்கள் எவையும் இஸ்லாத் தவிர வேறு எந்த மதச் சார்புடைய இயக்கங்களும் இல்லை என்பதையும் நாம் பார்த்திடல்வேண்டும்.**

அந்த நாடுகள் அளவில் அந்த அந்த அரசுகளைத் தக்க வைத்துக் கொள்வது என்பது மிக அடிப்படை யான காரணிகளாக அமைந்துவிட்டன.

இரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் தன் நாடுகளில் உள்ள முரண்பட்டச் சிக்கல்களைச் சரி செய்து கொள்வதற்கும், உலகில் தமது மேலாண்மையைக் கொண்டுவர ஏதும் சந்து கிடைக்காதா எனும் பார்வையில் அமைந்ததாகவே இருக்கிறது.

இந்தியா எப்படியும் அமெரிக்காவைத் தனக்கு முழுச் சாதகமாக்கிக் கொள்ளத் தவமாய்க் கிடக்கிறது. அமெரிக்காவைத் தனக்கான தலைமை காடைய்ன (ரவுடிய)ாக ஏற்றுக் கொண்டால்தான் பாக்கிஸ் தானை திறம்பட எதிர்க்க முடியும் என்றும், காஷ்மீரை எப்படியாவது தனக்கானதாக மாற்றிக் கொள்ள முடியும் என்றும் அங்காந்து கிடக்கின்றது.

பாக்கிஸ்தானும் அப்படியே அமெரிக் காவைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டால்தான் அது இந்தியாவின் பக்கம் முழுமையாகச் சேர்ந்து விடுகிற வாய்ப்பு தடுக்கப்படும் என்றும், காஷ்மீரச் சிக்கலில் அமெரிக்கா தலையிட முடியாதபடி போகும் என்றும், ஆப்கானில் தனக்கு எதிரான அரசு அமையாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்பதுமான பல காரணங்களின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆக மொத்தத்தில், அனைத்து அதிகார வெறியர்களும் தங்களை எப்படியும் காப்பாற்றிக் கொள்ள தங்களுக்கு எதிரானது பயங்கரவாதமே என்பதாகவும், பயங்கரவாதத்தினால்தான் நாடு சீரழிகின்றது என்பதாகவும், பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டால் நாடுகள் வளமாகும் என்பதாகவும், ஊழலற்ற, சாதி-மத வெறியற்ற, சுரண்டலற்ற, மக்கள் நலம் நாடுகிற ஆட்சியை அப்போதுதான் தரமுடியும் என்பதுமாகவும் மக்களை மயக்குவதும், மக்களுக்கு பயங்கரவாதமே எதிரி என்பதாகவும் பொய்யுரைக் கின்றன.

அமெரிக்காவோ, உலகம் முழுமையும் இருபத்திஆறு இயக்கங்கள் பயங்கரவாத இயக்கங்கள் என்பதாகவும், அவற்றை முற்றாக ஒழித்து விட்டால் உலகில் எந்தத் தடையும் இருக்காது என்றுமாகவும் கூறுகின்றது.

உடனே இந்தியாவும் தன் பங்குக்கு அமெரிக்கா தடத்திலேயே இருபத்து மூன்று இயக்கங்களைச் சுட்டிக்காட்டி இந்த இயக்கங்களைத் தடை செய்வதாக அறிவித்தும், அந்த இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்கள் என்றும் பறைசாற்றி இருக்கின்றது.

இங்கு அமெரிக்காவும், இந்தியாவும் சுட்டிக் காட்டிப் பட்டியலிட்டிருக்கிற இயக்கங்கள் அனைத்தும் இருவகைப்பட்ட நோக்கமுடையன வாக உள்ளன. ஒன்று அவை தேச விடுதலை இயக்கங்களாக உள்ளன; மற்றது அவை இசுலாமிய மதச் சார்பு அமைப்புகளாக உள்ளன.

அந்த இரண்டு போக்குடைய இயக்கங்களும் தம்மிடையில் இருவேறு அடிப்படைக் கோட்பாடு களைக் கொண்டு இயங்குவனவாகவே உள்ளன.

தேச விடுதலை இயக்கங்கள் மார்க்சிய வழிப் பட்ட கோட்பாடுகளையும், இசுலாமிய மதச்சார்பு இயக்கங்கள் மதவழிப்பட்ட கோட்பாடுகளையும் கொண்டு இயங்குகின்றன.

தேச விடுதலை இயக்கங்கள் மார்க்சிய வழிப்பட்டு இயங்குகின்ற அதேபோது, அத்தேசத் தின் மரபு வழிப்பட்ட இயங்கியல் போக்கு வளர்ச்சியை அவை புறக்கணித்து விடவில்லை.

அதேபோல், மதவழிப்பட்ட இயக்கங்கள் வெறுமனே மதத்தின் விடுதலையாக - மதவழிப் பட்ட உரிமைகளாக மட்டும் தம் நோக்கங்களை முன் வைக்காமல் தேசம் சார்ந்ததாகவே முன் வைக்கின்றன.

மேலும், இங்கு இன்னொன்றையும் நாம் இணைத்துப் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது.

அமெரிக்காவும் சரி, இந்தியாவும் சரி தடை செய்ததாக அறிவித்துள்ள இயக்கங்களில் மதச் சார்புடைய இயக்கங்கள் எவையும் இஸ்லாத் தவிர வேறு எந்த மதச் சார்புடைய இயக்கங்களும் இல்லை என்பதையும் நாம் பார்த்திடல்வேண்டும்.

கிறிஸ்துவத் தீவிரவாத இயக்கம் என்பதான ஒரு இயக்கத்தையோ, யூத மதத் தீவிரவாத இயக்கத்தையோ அல்லது பௌத்த, சைன மதத் தீவிரவாத இயக்கத்தையோ, இந்துமத வெறி கொண்டு கிறித்துவ கோயில்களையும், மசூதி களையும் தரைமட்டமாக்கிய தோடு அம்மதங் களின் மக்களைக் ஏராளமாகக் கொன்று குவித்த இயக்கங்களையோ அவை குறிப்பிடவில்லை.

அந்த மதச்சார்புடைய இயக்கங்கள் எவையும் வன்மையாகத் தம் மதப்பரப்பல் நிகழ்வுகளைச்



படிப்பகம்

www.padippakam.com

செய்கிற மதங்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

அதேபோல் - அந்த மதச்சார்புடைய இயக்கங்கள் யாவும் ஏதோ மதங்களாக இருக்கின்றனவே அல்லாமல், இன உணர்வோடு பிணைந்து தேசச் சிக்கல்களை எழுப்பிடவில்லை என்பதாகவும் குறிப்பிட முடியாது.

அப்படி இருக்க இன்றைக்கு அமெரிக்கா வெளியிட்டிருக்கிற பயங்கரவாத இயக்கப் பட்டியலும், இந்தியா வெளியிட்டிருக்கிற பயங்கரவாத இயக்கப் பட்டியலும் எப்படி தேச விடுதலை இயக்கங்களையும், இஸ்லாமிய மதச் சார்புடைய இயக்கங்களையும் மட்டுமே இணைத்துள்ளன.

தேச விடுதலை இயக்கங்களை அந்த இரண்டு அதிகார வெறி அரசுகளும் பயங்கரவாதமானவை என்று குறிப்பிடுவதில் கூட பொருள் இருக்கலாம்.

ஏன் எனில், அவ்வியக்கங்கள் இந்த அரசுகளின் அதிகாரவெறித்தனத்தை வீழ்த்துகிற முயற்சியுடையவை. பல்வேறு தேசிய இனங்களை ஒடுக்குவதோடு, அவற்றுக்கான எத்தகைய அடிப்படை உரிமைகளையும் மறுக்கிறபோது அந்த அதிகார அரசுகளுக்கு எதிராக அணி திரண்டு செயல்படுபவை. எனவே இந்த அரசுகளுக்கு இவை பயங்கரவாத அமைப்புகளாகவே புலப்படுகின்றன.

**அனைத்து அதிகார வெறியர்களும் தங்களை எப்படியும் காப்பாற்றிக் கொள்ள தங்களுக்கு எதிரானது பயங்கரவாதமே என்பதாகவும், பயங்கரவாதத்தினால்தான் நாடு சீரழிகின்றது என்பதாகவும், பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டால் நாடுகள் வளமாகும் என்பதாகவும், ஊழலற்ற, சாதி–மத வெறியற்ற, சுரண்டலற்ற, மக்கள் நலம் நாடுகிற ஆட்சியை அப்போதுதான் தரமுடியும் என்பதுமாகவும் மக்களை மயக்குவதும், மக்களுக்கு பயங்கரவாதமே எதிரி என்பதாகவும் பொய்யுரைக்கின்றன.**

ஆனால், இஸ்லாமிய மதச் சார்புடைய இயக்கங்களையும் பயங்கரவாத அமைப்பு என இந்த அரசுகள் குறிப்பிடுவதில் உள்ள பின் புலத்தை நாம் ஆய்ந்து பார்த்தல் வேண்டும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நடந்த நிகழ்வுகளும், அதற்கு முன்னர் நடந்த நிகழ்வுகளுமாக நாம் சிலவற்றை இணைத்துப் புரிந்து கொள்ளுகிற போது மட்டுமே, இத்தகைய போக்குக்கான காரணத்தை நாம் சரிவர விளங்கிக் கொள்ளமுடியும்.

வணிக நோக்கில் நாடுகளைக் காலனிகளாக மாற்றி ஆட்சியை விரிவு படுத்திய பழைய காலனி ஆட்சி முறையிலும், நாடுகளில் மூலதனம் செய்து அந்த நாட்டு உழைப்பாளிகளை வைத்துக் கொண்டே தொழில் தொடங்கி, ஊதியத்தைக் கொள்ளை யடித்து வருகிற முறையிலான காலனி ஆட்சி முறையிலும் உலகம் முழுமையும் அடிமைப் பட்டுப் போன பல நாடுகளைப் போல அரபு நாடுகளும் பெருவாரியாக அடிமைப்பட்டன.

தங்கத்தையும், கனிவளங்களையும் தேடி அலைந்த வல்லரசுகளுக்கு அரபு நாடுகளின் கன்னெய் (பெட்ரோல்)க் கிணறுகள் கண்களை உறுத்தின.

தங்களுடைய மூலப் பணங்களை யெல்லாம் அங்குபோய்க் குவித்தனர்.

உலகம் முழுக்கக் கிடைக்கிற கன்னெயில் (பெட்ரோலில்) ஏறத்தாழ எண்பது விழுக்காடு கன்னெய் அங்கிருந்து மட்டுமே கிடைக்கிறபோது அதைக் கொள்ளையடிக்க வல்லரசு நாடுகளிடையே கடும் போட்டி நிலவின.

அமெரிக்காவும், இரஷ்யாவும், பிரிட்டனும், பிரான்சும், ஜெர்மனியும், ஜப்பானும் என அனைத்து நாடுகளும் அரபுநாடுகளின் கன்னெய் வயல்களில் தங்களின் தொழிலகங்களைப் பெருக்கின.

அதன் வழிக் கிடைக்கிற கொள்ளை ஊதியத்திற்கு மாற்றாக தங்கள் நாடுகளின் உற்பத்திப் பொருள்களையே அந்நாடுகளில் விற்பனை செய்தன.

அரபு நாடுகள் தண்ணியிலிருந்து வாழ்க்கைத் தேவைக்குப் பயன்படும் அனைத்துப் பொருள்களுக்காகவும் அந்நிய நாடுகளின் மூல தனத்தையே சார்ந்து வாழ்கிற போக்கை அங்கு உருவாக்கினர்.

பொருளியல் வழி முழுமையாகச் சார்பாகிப் போன அந்த நாடுகள் எந்தச் சூழலிலும் அரசியல்வழி அணிதிரண்டு படைவழி தங்களை அச்சுறுத்தலாம் எனும் அச்சம் வல்லரசுகளுக்கு ஏற்பட்டது.

எனவே இரண்டாம் உலகப்போர் முடிந்த நிலையில் உலகம் முழுமையும் அதிகார வகுப்பினர்களாகப் பரவி இருந்த யூதர்களை எல்லாம் ஒருங் கிணைத்து இஸ்ரேல் புனித பூமி என்றும், ஏசு கிறிஸ்து பிறந்த இடம் என்றும் கூறி இஸ்ரேல் நாட்டை யூதர் களுக்கான நாடாகவும், அதைக் கிறிஸ்துவ நாடு என்பதாகவும், அதன் ஆட்சி மொழி சில இலக்கம் மக்கள் மட்டுமே அறிந்து வைத்திருக்கிற 'ஹிப்ரு' மொழி என்றுமாகக் கூறி இஸ்ரேலைப் பல்வேறு நாடுகளின் ஒப்புதலைப் பெற்று அமைத்தன அமெரிக்காவும், பிரிட்டனும்.

அந்தப் பகுதிகளில் வாழ்ந்த பாலஸ்தீனர்களை விரட்டி அடித்து, அவர்களை நாடற்றவர்களாக மாற்றியதோடு, இன்றைய வரையில்



படிப்பகம்

பாலஸ்தீனத்தைத் தனி நாடாக ஏற்காமலும் வைத்திருக்கிறது.

www.padippakam.com

ஆனாலும், பாலஸ்தீனத்தைத் தனி நாடாக ஏற்கவில்லை என்பதான சிக்கலோடு அந்தச் சிக்கல் முடிவடைந்துவிட வில்லை. அதைக் கடந்து மத வழியாகவும், யூத இனவழியாகவும் இஸ்ரேலை விரைவு விரைவாக உருவாக்கியதற்கும், ஒரு நாடாக அரசாக அமைத்ததற்கும் ஆன காரணம் முகாமையானது.

நடுவக் கிழக்கு ஆசியப் பகுதியில் இருக்கிற துருக்கி, சிரியா, இராக், இரான், லெபனான், சைப்ரஸ், ஜோர்டான், சவூதி அரேபியா, ஏமான், தெற்கு ஏமான், ஓமான், குவைத், ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தான், எகிப்து, லிபியா, சூடான், சோமாலியா, எத்தியோபியா - ஆகிய நாடுகள் அனைத்தும் அடர்த்தியான இஸ்லாமிய மதப்பின் பற்றாளர்களின் நாடாக இருக்கிறபோது, அந்நாடுகளுக்கிடையில் தங்களுக்கான அரசியல், அதிகாரத்தை முழுமையாகச் செயலாக்குகிற நாடாகவே இஸ்ரேலை இந்த வல்லரசுகள் உருவாக்கின.

இஸ்ரேலை மிகப் புதிய தொழில் நுட்பங்களுடன் உருவாக்குவதும், பணப்புழக்கத்தில் அதிகப் படியான நிலையில் வளர்ப்பதும், போர் நிலையில் மிகப் புதிய கருவிகளுடன் அமைப்பதையுமே அமெரிக்காவும், பிரிட்டனும் பிற நாடுகளும் முழு முனைப்பாக ஏற்றுச் செயல்படுத்தின.

**உலக அளவில் விரிந்திருக்கிற வல்லரசியக் கொடுங்கோண்மையை எதிர்க்க உலக அளவில் விரிந்த ஐக்கிய முன்னணியைக் கட்டவேண்டிய கடமையை மார்க்சிய வழிப்பட்ட கட்சிகள் கட்டத்தவறியதன் காரணமே — வல்லரசியம் தலைவிரித்து ஆடுகின்றது.**

அண்மையில் தென் ஆப்பிரிக்கா டர்பனில் நடந்த இன ஒடுக்குமுறைக்கு எதிரான உலக ஒன்றியத்தின் (ஐ.நா.வின்) மாநாட்டில் பாலஸ்தீனச் சிக்கலைப் பற்றிப் பேசுவதில் பங்கெடுக்க மறுத்து இஸ்ரேல் வெளிநடப்பு செய்த போது, அதற்கு ஆதரவாக அமெரிக்காவும் பங்கேற்காமல் சென்றது வரைக்குமான நிகழ்வுகள் வழி அவை இணைந்து செயல்படுவதின் உள்நோக்கம் தெளிவாக முடியும்.

இந்தப் பின்னணியில் அரசியல் வழியிலும் - படைவழியிலும் தன் சார்பு அரசை அரபு நாடுகளின் அருகில் உட்கார வைத்துக் கொண்டு அமெரிக்கா, அந்நாடுகளின் எழுச்சியை நசுக்குகிற போக்கு கொஞ்சநஞ்சமல்ல.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தானில் பெருமளவு கன்னெய் (பெட்ரோல்) கிடைக்காமல் போனாலும், அரபு நாடுகளில் கிடைக்கிற கன்னெய்க்கான வணிகத்தைத் தரை வழிக் குழாய்களில் எடுத்துவர ஆப்கானிஸ்தானைப் பயன்படுத்தவேண்டியும், அரசியல் வழி தனக்குச் சார்பு நாடாக்குகிற முயற்சியிலும் அமெரிக்காவும், பிரிட்டனும் தொடர்ந்து செயல்பட்டன.

மேலும் அன்றைக்கு சோசலிசக் குடியரசை நோக்கிக் கட்டமைக்கப்பட்டிருந்த சோவியத்து அரசுகளின் ஒன்றியத்தைக் குலைக்கிற முயற்சியை ஆப்கானிஸ்தானத்தைத் தன் தளமாக வைத்துக் கொள்வதிலிருந்தும் செய்யமுடியுமான வகையில் முனைந்தன அமெரிக்க, பிரிட்டன் வல்லரசுகள்.

ஏறத்தாழ அதே சூழலில் தனக்குச் சாதகமான அரசை ஆப்கானில் உருவாக்குகிற முயற்சியில் அன்றைய சோவியத்து ரஷ்யாவும் தன் படைகளை ஆப்கானில் இறக்கிப் பத்தாண்டுகள் அடக்கி வைத்திருந்தன.

இருப்பினும் - தன் ஒன்றிய அளவிலேயே ஒப்புரவியத்தை(சோசலிசத்தை)ப் பேண மாட்டாத சோவியத்து ஒன்றியத்தால் ஆப்கானில் பத்தாண்டுகள் உள் நுழைந்து கிடந்தும் அதையும் ஓர் ஒப்புரவியக் குடியரசு உருவாக்கத்தில் இணைக்கிற முயற்சியை செய்ய எவ்வாறு முடியும்?

எனவே தங்கள் மீதான பிரிட்டானிய, அமெரிக்கா, ரஷ்ய போன்ற வல்லரசுகளின் வல்லூடுருவலை எதிர்த்துப் போராடிய முந்நூறு ஆண்டு காலப் போராட்ட வழித் தடத்திலேயே ஆப்கானிஸ்தானால் அண்டை அரபு நாடுகளின் சிக்கல்களை விளங்கிக் கொள்ளமுடிந்தது.

இந்தோனேசியாவின் மீதான போரையும், பாலஸ்தீனத்தின் மீதான வல்லாளுமையையும், வளைகுடா நாடுகள் மீதான அடக்குமுறைகளையும், ஈராக் மீதான போரையும் இணைத்தே விளங்கிக் கொண்டனர் இஸ்லாமிய மக்கள்.

பாக்கிஸ்தானை எதிர்மைப்படுத்தி இந்தியா செய்யும் அரசியலையும், காஷ்மீர மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குகிற இந்தியாவின் வெறிச் செயலையும் அவர்களால் இஸ்லாத்திய மக்கள் மீதான ஒடுக்கு முறைகளாகவே கணிக்க முடிந்தது.

இஸ்லாமிய நாடுகள் மீதான திட்டமிட்ட போரை இந்த வல்லரசு நாடுகள் செய்கிறபோது, மிகப்பெரிய கோட்பாடுகளையோ, படையியல் வழி முறைகளையோ அவை தங்கள் தளங்களில் இருந்து விளங்கிக் கொள்ள இயலவில்லை.

அப்படி விளக்கப்படுத்த வேண்டிய கடமையையும் உலகம் முழுக்கப் பரவி இருக்கிற மார்க்சியக் கோட்பாட்டாளர்களின் கட்சிகளும் செய்துவிடவில்லை.

அமெரிக்காவும் பிற வல்லரசுகளும் அரசியல் அளவிலும், பொருளியல் அளவிலும், படை வழிப்பட்ட நிலையிலிருந்து தங்களையும், இஸ்லாமிய நாடுகளையும் பிரித்துவைத்துத் தாக்குகிற போது, அவற்றை அவை அந்த நோக்கங்களுக்காகவே எதிர்க்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

அந்த வகையிலே ஆப்கானிஸ்தானுக்குள் இன்றைக்கு அமெரிக்காவையும், அதன் கூட்டு நாடுகளையும் எதிர்க்கத் தொடங்கியிருக்கிற தாலிபான்களும், அல்கொய்தா இயக்கமும் செயல்படுகின்றன.

அமெரிக்கா பசப்பல் சொற்களாகச் சொல்கிறபடி, *“நாங்கள் தலிபான்களைத்தான் எதிரிகளாக எண்ணி எதிர்க்கிறோமே அல்லாமல், இஸ்லாமியர்களை அல்ல”* என்பதில் உண்மையைக் கடந்த பொய் அடங்கி யிருப்பது போல,

*“நாங்கள் அமெரிக்காவைத் தான் எதிர்க்கிறோமே தவிர கிறிஸ்தவர்களை அல்ல”* - என்று தாலிபான்கள் சொல்ல முன் வருவார்களானால் அதிலும் உண்மையைக் கடந்து பொய்யும் அடங்கி இருக்கலாம்.

காரணம் - இன்றைக்கு வேறு வழி இல்லாமல், வேறு கோட்பாடுகள் தங்கள் வாழ்க்கைக்கான, தங்கள் நாட்டிற்கான விடுதலைக்காகக் குரல் எழுப்பாததால், போராடததால்; அவர்களின் கண் முன்னே அனலாய்க் கனன்றிருப்பதாகவே அவர்கள் இஸ்லாமிய மத 'மார்க்கத்'தை விளங்கிக் கொள்கின்றனர்.

*“அடக்குமுறை எங்கு இருக்கின்றதோ அங்கு வன்முறையைக் கையாளச் சொல்லுகிறது குரான்”* - என்கின்றனர் அவர்கள்.

மேலும் *“எப்படிச் சமய நெறிகளுக்குத் தடை விதிக்கப்படுகிறதோ, மக்கள் நசுக்கப் படுகின்றனரோ, அவர்களின் நிலங்கள் ஆதிக்கர்களின் ஊடுருவலுக்கு இலக்காகின்றதோ – அப்படியான போக்கையே அடக்கு முறை”*- என்பதாக அவர்கள் தங்களின் நேர்காணல் களில் விரிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆக - அவர்களின் எழுச்சி என்பது விடுதலைக் கான எழுச்சி, அவர்களின் போராட்டம் என்பது உரிமைகளுக்கான போராட்டம் - ஆனால் அத்தகைய எழுச்சிகளுக்கோ, போராட்டங் களுக்கோ அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற கோட்பாடு இஸ்லாமிய மதவியல் கோட்பாடாக இருக்கிறது.

ஆக, இப்படியாக இருந்தும் அவர்கள் குறிவைத்த இலக்குகளில் அரசியல் வெளிப்பாடு இருந்ததே அல்லாமல் மத வெறிப்போக்கு இருந்திடவில்லை.

அமெரிக்காவின் உலக வணிக அவைக்கு எதிராகவும், அமெரிக்கா பென்டகன் எனும் படையியல் தளத்திற்கு எதிராகவும் நடத்தப்பெற்ற தாக்குதல்கள் அவர்களின் மதவழிப்பட்ட நோக்கங் கருதியதே என்று ஒதுக்கிவிடமுடியாது.

அந்தத் தாக்குதல்களால் மக்கள் பலர் இறந்து போயினர் என்கிற வகையில் அவற்றுக்கு வருத்தம் தெரிவித்திருந்தாலும், அந்தத் தாக்குதல்களில் உள்ள அரசியலையும், அதன் இலக்குகளையும் எந்த மார்க்சிய அல்லது மக்கள் நலம் நோக்கிய இயக்கங்களாலும், மக்களாலும் எதிர்மறையாகக் கூற முடியவில்லை.

**உலகில் உள்ள அமெரிக்க அடி வருடிகளுக்கும், யூத–கிறித்துவ மத வெறியர்களுக்கும், இந்தியப் பார்ப்பனிய ஆதிக்கர்களுக்கும் வேண்டுமானால் இந்த வெடிப்புகளைச் செரித்துக் கொள்ள முடியாமல் போகலாம். ஆனால் உலகம் முழுமையும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் இத்தாக்குதல்கள் நிறைவளிப்பவையே.**

உலகில் உள்ள அமெரிக்க அடி வருடிகளுக் கும், யூத-கிறித்துவ மத வெறியர்களுக்கும், இந்தியப் பார்ப்பனிய ஆதிக்கர்களுக்கும் வேண்டுமானால் இந்த வெடிப்புகளைச் செரித்துக் கொள்ள முடியாமல் போகலாம். ஆனால் உலகம் முழுமை யும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் இத்தாக்குதல்கள் நிறைவளிப்பவையே.

இத்தகைய வெட்ட வெளிச்சமான நிலையில் நாம் இரண்டு செய்திகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டி யுள்ளது.

ஒன்று - அல்கொய்தா இயக்கத்தின் இந்தச் செயல் மதவெறி சார்ந்ததா-மதவெறிச் சார்புடையது எனில், அந்தச் செயலை செயல் அளவில் ஏற்றுக் கொள்ளுகிற போது - அந்த இயக்கத்தை மட்டும் எப்படி பயங்கரவாத இயக்கம் என்று வல்லரசுகள் கணிப்பது போல் முற்போக்கர்களும் கணிக்க முடியும் என்பது.

அஃதாவது அமெரிக்க அரசாங்கத்தை உலகத்தின் மிகப் பெரும் பயங்கரவாதி என்று வரையறுக்க முடிகிற முற்போக்கு இயக்கங்களால், வல்லரசிய எதிர்ப்பை மத அடிப்படைவாத நோக்கில் செய்வதை மட்டும் எப்படி ஒப்புக் கொள்ள இயலவில்லை.

மத அடிப்படை வாதத்தின் கீழ் அமைந்திருக் கிற நாட்டு மக்களுக்கு பெரிய கோட்பாடாக உணர வைக்கப்பட்டிருப்பது இஸ்லாமிய மதவியல் கோட்பாடே.

அது சொல்லுகிற வல்லரசிய எதிர்ப்பையே அவர்கள் செயலளவில் செய்கின்றனர்.

அவற்றோடு நம்மால் முழுமையாக ஒத்துப் போக இயலாது என்பதில் நமக்கு மறுப்பு இல்லை.

இங்கு நம் நிலத்தின் விடுதலைக்கு யார் யாரை எதிர்க்க வேண்டியிருக்கிறது. இந்திய அளவில் - யார் யாரை எதிர்ப்பதற்கு யார் யாரை அணிசேர்க்க வேண்டியிருக்கிறது - அதுபோல் உலக அளவில் யார் யாரை எதிர்ப்பதற்கு யார் யாரை அணிசேர்க்க வேண்டியிருக்கிறது என்கிற அளவீட்டு முறை மிக முகாமையானது.

நம் நிலத்தின் புரட்சி இலக்கு இங்குள்ள வகுப்பு எதிரிகளைக் கூட ஒரே அரங்கில் நிறுத்தி வைத்திடுவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com



## அமெரிக்கா 'ஜனநாயக நாடு'தானா?

இந்தத் தலைமுறையின் ஈடு இணையற்ற சுதந்திரச் சிந்தனையாளராக மதிக்கப்படுகிற அமெரிக்கப் பேராசிரியர் நோம் சாம்ஸ்கி சென்னையில் பேசிய கூட்டத்தில் அறிவு ஜீவிகள் திரளாகக் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி நடைபெற்ற சங்கீத வித்வத் சபையைச் சுற்றிலும் போக்குவரத்தே நெரிசலுக்குள்ளாகியது. இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கண்டு பேராசிரியரே ஆச்சரியப்பட்டிருப்பார். ஆனால் அவருடைய பேச்சு அனைவரையுமே திகைப்பில் ஆழ்ந்தியது. "பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு, ஆப்கன் மீது அமெரிக்கா தொடுத்துள்ள போர் மிகப் பெரிய பயங்கரவாதம்" என்று கூறியதுடன் அவர் நிற்கவில்லை. "செப். 11-ம் தேதி அமெரிக்காவில் நடைபெற்ற பயங்கரவாதத்தைவிட மோசமான பயங்கரவாதம் ஆப்கன் போர்" என்று ஒப்பிட்டுக் கூறி அனைவரையும் மலைக்க வைத்தார்.

'அமெரிக்காவை வளமிக்க நாடு என்று புகழ்கிறார்கள்; ஆனால் அந்த வளம் அடங்கியிருப்பது – அதை அனுபவிப்பது அமெரிக்கச் சமுதாயத்தின் ஒரு சிறு பகுதியே' என்றும் குறிப்பிட்டார். அமெரிக்காவை – அதன் கொள்கையை – அதுவும் வேற்றுநாட்டு மண்ணில் ஓர் அமெரிக்கர் பகிரங்கமாகக் கண்டிப்பதென்றால் அதற்கு எவ்வளவு மன உறுதியும் சிந்தனைத் துணிவும் தேவை? இந்த ஆச்சரியம் இப்பேராசிரியருக்கு உலகளாவிய தனி வடிவத்தையே சமைத்திருக்கிறது. அதிகார பலம், அரசியல் பலம், பண பலம் போன்றவற்றைச் சட்டை செய்யாமல் ஒதுக்கித் தள்ளிவிட்டு எந்தப் பிரச்சினையையும் அறிவுபூர்வமாகவும் மானுட உணர்வுடனும் துணிவுடன் அணுகும் முறை இந்த அறிஞருக்குத் தனிப் புகழைச் சேர்த்துள்ளது.

இதைவிட அதிசயம் என்னவென்றால் "அமெரிக்கா ஜனநாயக நாடே அல்ல" என்று அவர் சாதித்ததுதான். "அமெரிக்காவின் நிரந்தர நலன்கள் எவை தெரியுமா? சொத்தும் செல்வமும் குவித்து வைத்திருப்பவர்களின் நலன்கள் அவை. ஆட்சியே அவர்களுக்காகத்தான் நடைபெறுகிறது" என்றதுடன் அவர் அமையவில்லை. மக்களில் பெரும்பாலோர் அரசியலில் செல்வாக்கு இல்லாதவர்கள்; "அரசியலைவிட்டு ஒதுக்கப்பட்டிருப்பவர்கள்" என்று கூறி, திகைப்பை ஏற்படுத்தினார். 'இந்தப் பெரும்பான்மை மக்களுக்கு நுகர்பொருள் கலாசார உணர்வுப் போதையை ஏற்றி கூட்டுப்புழு போல ஒடுங்கிக் கிடக்க வைத்துவிடுகிறது அமெரிக்க ஜனநாயகம் என்றும் அவர் வர்ணித்தார். இது ஒரு வகையில் தமிழ்நாட்டுக்கும் 'பொருந்தக் கூடியதே. பெரும்பாலான மக்களுக்குச் சினிமா போதையை ஏற்றி மழுங்கடித்து இங்கு அரசியல் வெற்றிகரமாக நடைபெறவில்லையா?

ஆனால், இப்பேராசிரியரின் எதிரிகள் – அமெரிக்கக் 'காதலர்கள்' - இவரை வைத்தே மிகச் சுலபமாக அமெரிக்க ஜனநாயகத்துக்குத் தனி மவுசைக் கூட்டிவிடுவார்கள். டாலர்களா அமெரிக்காவின் நிஜமான செல்வம்? அதன் உண்மையான செல்வம் - சுதந்திரச் சிந்தனைக்கு, கருத்துரிமைக்கு அங்குள்ள தங்கு தடையற்ற தாராள வாய்ப்புதான். இந்தப் பேராசிரியரே அந்த 'அபூர்வ செல்வத்தின் அற்புதச் சின்னம்' என்று இவரை மடக்குவதற்கு அவர்களால் நிச்சயம் முடியும். ஆனால் பயங்கரவாதம் குறித்து அவர் எழுப்பி வரும் கேள்விகளுக்கு விடை காணவேண்டும் என்பதை நிராகரித்து விட முடியாது.

நன்றி : "தினமணி" ஆசிரியர் உரை 12-11-2001

வல்லரசியச் சார்புள்ள தரகு முதலாளிகளையும் தேசிய முதலாளிகளையும் வேறு பிரித்து அறிகிறோம்.

தேசிய முதலாளிய வகுப்பின் தேச நலனை தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அல்லது வல்லரசிய எதிர்ப்புப் போரட்டத்திற்கு ஆதரவானதாக நிறுத்து கிறோம்.

தேசிய முதலாளிய வகுப்பு பல்வேறு ஆதிக்கக் குணங்களைக் கொண்டிருக்கிறபோதும், அது கோட்பாட்டளவில் பிற்போக்கான கோட்பாடுகளைக் கொண்டு விளங்குகிறபோதும், அதை வல்லரசிய எதிர்ப்பு வரிசையில் அணி திரட்ட நம்மால் ஒப்புக் கொள்ளமுடிகிறது.

அதுபோல் - உலக அளவில் வல்லரசிய எதிர்ப்பு நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கையில், அந்த எதிர்ப்புச் செயல்களை முன் எடுத்துச் செய்கிற இயக்கத்தவர்கள் கோட்பாட்டளவில் மத அடிப்படை 'நோக்குடையவர்கள் என்பதற்காக அவர்களையும் 'பயங்கரவாதிகள்' என்பதை எவ்வாறு ஒப்புக் கொள்ளமுடியும்?

அவர்களின் அமைப்பு மதவியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், களின் செயல்கள் மதக் காழ்ப்புணர்வோடு - பிற மதவியல் தளங்களை உடைத்தெரிவதாகவோ, பிற மதத்தினர் களை அழித் தொழிப்பதாகவோ இருந்திட வில்லையே.

அல் கொய்தா இயக்கம் இதுவரை மேற்கொண்ட தாக்குதல் நிக ழ்வுகள் அனைத்தும் அமெரிக்க வல்லரசை எதிர்த்தே அல்லவா அமைந்திருக்கிறது.

அதுபோல் காஷ்மீர விடுதலைப்போராட்டம் என்பதும் ஒரு மதவியல் போராட்டம் என்பதைக் கடந்து, ஒரு தேச விடுதலைப் போராட்டமாக அல்லவா நடந்துகொண்டிருக்கிறது.

ஆக-இவற்றில் உள்ள வல்லரசிய எதிர்ப்புப் போக்கை எந்த அளவு பயனாக்குவது என்பதில் மார்க்சிய வழிப்பட்டவர்களுக்கு அல்லவா கூடுதலான சிந்தனை தேவை.

உலக அளவில் விரிந்திருக்கிற வல்லரசியக் கொடுங்கோண்மையை எதிர்க்க உலக அளவில் விரிந்த ஐக்கிய முன்னணியைக் கட்டவேண்டிய கடமையை மார்க்சிய வழிப்பட்ட கட்சிகள் கட்டத்தவறியதன் காரணமே - வல்லரசியம் தலைவிரித்து ஆடுகின்றது.

ஐக்கிய முன்னணியை அரசியல் வழி சட்டமைப்பது என்பது ஒருகோணம் எனில், போர்த்தந்திர அடிப்படையில் கட்டுவது இன்னொரு கோணம் அல்லவா.

அத்தகைய பல்முனை நகர்வுகள் இல்லாமல் வல்லரசியத்தை உலகளாவிய நிலையில் எப்படி வீழ்த்த முடியும்.

ஆக-பின்லேடனுடனோ அல்லது அல் கொய்தா இயக்கத்தின் கோட்பாடுகளுடனோ நாம்



படிப்பகம்

www.padippakam.com

உடன் படாமல் போனாலும், அவர்களின் வல்லரசிய எதிர்ப்பை ஏற்றுக் கொண்டேயாக வேண்டி இருக்கிறது.

நாம் வல்லரசிய எதிர்ப்புப் போராட்டங் களைச் செய்வது ஒரு பக்கம் எனில், அவர்களின் வல்லரசிய எதிர்ப்புப் போராட்டங்களை ஆதரிக்க வேண்டுவதும், ஆதரவாகக் குரல் எழுப்ப வேண்டுவதும் இன்னொரு பக்கம்.

அப்படியான நம் ஆதரவுகளும் பிணைப்பு களும் தாம் அவர்களையும் கோட்பாட்டளவில் மாற்றிச் சிந்திக்க வைக்கும்.

இவை ஒரு செய்தி எனில், இன்னொரு செய்தியையும் இங்குள்ள மார்க்சிய இலெனினியச் சிந்தனையாளர்களுக்கும், கட்சியினர்க்கும் நாம் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

அமெரிக்க அரசு தடை செய்த 26-அமைப்பு களிலும் சரி, இந்திய அரசு தடை செய்திருக்கிற 23 அமைப்புகளிலும் சரி தேச விடுதலை இயக்கங்களும், இஸ்லாமிய மத அடிப்படை இயக்கங்களுமே உண்டு என்பதையே பார்த்தோம்.

ஆனால் - அந்த இயக்கங்களில் மா.இலெ. இயக்கங் கள் எதுவும் அடங்கிவிடல்லை என்பதே அறியப்பட வேண்டிய செய்தி.

வல்லரசியத்திற்கும், இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்பிற்கும் மா.இலெ. கட்சிகள் பெரும் நெருக்கடி கொடுப்பதாக இவர்கள் பீற்றிக் கொள்வதில் எந்த அளவும் உண்மை இல்லை என்பதை அல்லவா அது தெரிவிக்கின்றது.

இது குறித்து இந்திய அரசிடம் கேட்கப் பட்டதற்குக்கூட, மக்கள் போர்க்குழுவின் நெருக்கடி ஒரு மாநிலத்தைச் சார்ந்த சிக்கல் என்பதாக அல்லவா விடை கூறப் பெற்றிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், மக்கள் போர்க் குழுவின் நெருக்கடிகளை அடக்கித் தமக்குப் படைப்பிரிவு தேவை என்று இந்திய நடுவண் அதிகார அரசிடம், ஆந்திர மாநில அரசு கேட்ட பொழுது, இங்கு நாங்கள் காஷ்மீர், அசாம் மற்றும் எல்லைச் சிக்கல்களைத் தீர்க்கவே படை மிகுதியாகத் தேவைப்படுகின்றது என்றும், இப்போதைக்கு இல்லை என்றுமல்லாவா விடை சொல்லி இருக்கின்றது.

இதிலிருந்து புலப்பட வேண்டிய செய்தி ஒன்று உண்டு.

அதாவது இந்திய மா.இலெ. இயக்கங்களின் வகுப்பு (வர்க்க)க்கோட்பாட்டு அரசியலில் நமக்குப் பெருத்த முரண்பாடு இல்லையானாலும், அவர்கள் தங்களின் இந்தியப் பூணூலையும், இந்துவியப் போர்வையையும் கழட்டாமல் இன்னும் இந்தியப் பூசாரிகளாக இருந்து கொண்டே மார்க்சியத்தை மந்திரங்களாக ஓதிக் கொண்டிருப்பதில்தான் நமக்கு உடன்பாடு இல்லை.

வல்லரசியமும், இந்தியப் பார்ப்பனியமும் மெலிவு பட்டிருக்கிற தேசிய இனச் சிக்கல் எனும் கண்ணிகளைக் கவனிக்காமல், இந்தியப் பூணூலோடு உறவாடிக் கொண் டிருக்கிற கூத்தை என்னவென்று இழித் துரைப்பது.

தங்கள் உடல்மீது கிடந்த பூணூல்களைக் கழட்டு வதில் சிக்கல்படாத அவர்கள், தங்கள் கோட்பாடுகளிலும், நடைமுறையிலும் ஒளிந்திருக் கிற பூணூலைக் கழட்ட மறுப்பது பார்ப்பனிய உணர்வு அல்லாமல் வேறு என்ன?

இல்லாத இந்தியாவிற்கு இவர்கள் கட்சியை வைத்திருப்பதும், இந்து உணர்வை மறுப்பதாகக் கூறிக்கொண்டு வீராச்சாமி, வரவர ராவ், கணபதி, பசுபதி, இராமச்சந்திரன் என்று இந்துவியப் பெயர் நாமங்களை நீட்டி இழுத்துக் கொள்வதும் இழிவில்லையா? இந்துவிய ப் போக்கில்லையா?

மா.இலெ. அமைப்பைச் சார்ந்த இஸ்லாமியர் ஒருவர் இஸ்லாமிய பெயரோடேயே இருப்பதை ஏற்க இயலாத இவர்களின் கோட்பாடு - இந்துமதப் பெயர்தாங்கிகளை மட்டும் ஏற்கிறது எனில் அதை இந்துவியம் என்று கூறாமல் வேறு எப்படிக் கூறுவது.

இத்தகைய குழப்படியான, இந்தியப் பார்ப் பனிய அடிவருடி அரசியலை - நடைமுறையை இவர்கள் கொண்டிருப்பதால்தான் அமெரிக்கப் படையே ஆப்கானைவிட்டு வெளியேறு என்கிற உப்புச் சப்பில்லாத முழக்கத்தைத் தெருமுனையில் நின்று முழங்கிவிட்டுச் செல்ல முடிகிறது.

அமெரிக்கா வல்லரசு ஆப்கானில் குவிகிற போது - அவ்வல்லரசை எதிர்ப்பதான நம் அரசியல் நடைமுறை, உலக அளவில் அமெரிக்காவை வலுகுன்றச் செய்விக்க வேண்டுமா? ஆப்கானை விட்டு மட்டும் வெளியேறச் செய்யவேண்டுமா?

தனக்கான சொந்தத் தளத்தில் அமெரிக்காவை மெலிவு படுத்துகிற வலுவான நடவடிக்கையே - உலக அளவில் அமெரிக்காவை நலிவு படுத்தச் செய்யும் என்பதைக்கூட இவர்கள் அறிந்து கொள்ளாதவகையில் இந்தியம் அவர்களின் கண்களை மறைத்திருக்கின்றது.

இந்தியத்தை வீழ்த்தாமல் வல்லரசியத்தை வீழ்த்த முடியாது.

இந்தியப் பூணூல்களைக் கழட்டாமல் வல்லரசிய வால் நறுங்காது.

எனவே - அத்தகைய அரசியல் உணர்வோடு போராடவும் நம் ஊர் தொடங்கி - நம் தேச அளவிலும் - அதைக்கடந்து கண்ட அளவிலும் - உலக அளவிலுமான இயக்கங்களுடன் ஒருங்கிணைவை ஏற்படுத்தவுமான காலம் இது.

இதைத் தவறவிடுவது புரட்சிக்கான சூழலைத் தவறவிடுவது மட்டுமல்ல - பின்னுக்கு இழுப்பதும் ஆகும். ●



படிப்பகம்

# எது பயங்கரவாதம்?

www.padippakam.com

உலக மக்களின் உள்ளங்களெல்லாம் விக்கித்து நிற்க ஆப்கானிஸ்தானைக் கொத்திக் குதறிக் கொண்டிருக்கிறது அமெரிக்கக் கழுகு.

இந்த நேரத்திற்குள் அந்த நாடு ஏறத்தாழ இருண்ட பகுதியாகி மாறிப்போய்விட்டது.

ஏழ்மையும், வறட்சியும் உள்ள அந்தப் பாலை நில மக்களின் நெஞ்சக் கனல் மட்டுமே கொதிப்புற்றிருக்கிறது.

உடல் வறண்டு, வாழ்க்கை வறண்டு அலைகின்றனர் ஆப்கானிய மக்கள்.

இவற்றுக்கெல்லாம் காரணம் யார்? 'பின்லேடன்' தான் காரணம் என்று அமெரிக்கா கொக்கரிக்கிறது.

செப்டம்பர் மாதம் 11-ஆம் நாள் அமெரிக்காவுடைய 'உலக வணிகச் சந்தைக்' கட்டிடங்களையும், பென்டகன் அமெரிக்கப் படைத்தளத்தையும் தாக்கியதால்தானே இப்படி நடந்தது என்று சில ஏமாளிகள் நினைத்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால் அது ஏதோ சில நாள்களில், சில நொடிகளில் நடந்துவிட்ட ஒரு பயங்கரவாத நிகழ்ச்சி என்பதாக நாம் மயங்கிப் போனால் நாமும் ஏமாளிகளாகி விடுவோம்.

அமெரிக்காவைத் தாக்கியதால்தானே இன்றைக்கு அமெரிக்கா ஆப்கானிஸ்தானத்தின் மீது போர் தொடுக்கிறது என்று காரணம் சொல்லி நியாயம் பேசுகிறவர்களால், அமெரிக்கா ஏன் தாக்கப்பெற்றது என்கிற காரணத்தை ஏன் தேட முடியவில்லை.

அமெரிக்கா ஆப்கானிஸ்தானைச் கோடிக்கணக்கான ஆயுதங்களை வைத்து அழிப்பது பயங்கரவாதம் இல்லை என்றால், அமெரிக்கக் கட்டிடங்களை அழித்தது மட்டும் எப்படி பயங்கரவாதமாகும்?

அமெரிக்கா ஆப்கானிஸ்தானத்தை அழிப்பதில் நியாயம் இருக்கிறது என்றால் அமெரிக்கக் கட்டிடங்களை அழித்ததில் மட்டும் நியாயம் இல்லாமல் போய்விடுமா என்ன?

அந்த நியாயங்களைத் தேட வேண்டிய பொறுப்பு நம்மிடையே இல்லையா?

உலகம் முழுக்க உறிஞ்சிக் கொழுப்பேறிக் கிடக்கும் ஆதிக்கவாதியின் திமிரை நியாயம் என்று நாம் வர்ணிக்கத் தொடங்கினால், உலக அடிமை மக்களின் எழுச்சியை என்ன என்று சொல்வது.

ஆங்கிலேயன் இந்தியாவை விட்டு வெளியேறியதற்கு முன்பு அந்நியப் பொருள்களை எரிக்கவில்லையா நம் மக்கள்.

ஆங்கிலேயனின் பணமும், படையும் இந்த மக்களை அடிமைப்படுத்தியது என்பதை உணர்ந்ததால்தானே அப்படிச் செய்தனர்.

அந்நியப் பொருள்கள் நமக்கு வேண்டாம் சுதேசியப் பொருள்களையே பயன்படுத்துவோம் என்றனர்.

ஆனால், ஆங்கிலேயன் போனபின் உலகில் உள்ள எல்லா ஆதிக்கர்களும் இங்கு வந்து ஏறி மிதித்து அவன் அவன் வைத்ததுதான் சட்டம் என்றும், அவன் பொருளைத்தான் வாங்க வேண்டும் என்றும் சண்டித்தனம் செய்வதை நாம் உணர்வது எப்போது?

இந்த ஊரில் இருந்த உழைப்பும், உற்பத்தியும் எல்லாம் அமெரிக்காவுக்கும் பிற ஆதிக்க நாடுகளுக்கும் அல்லவா கொள்ளையடித்து எடுத்துச் செல்லப்படுகிறது.

இந்த ஊரில் இருந்த காளிமார்க், வின்சென்ட் போன்ற 'சோடா கம்பெனி' களையெல்லாம் மூடிவிட்டுப் பெப்சியும், கொக்கோ கோலாவும் நம் மூச்சை உறிஞ்ச வில்லையா?

இதன் இலாபம் எல்லாம் யாருக்கு? எல்லாம் அமெரிக்காவுக்குத் தானே.

நம் மூலப் பொருள்களையே வைத்து, நம் உழைப்பையே உறிஞ்சிக் கொண்டு நம்மிடமே பொருளை விற்று, இலாபத்தை மட்டும் பிடுங்கிக் கொழுக்கும் அந்த ஆதிக்கர்கள் பயங்கரவாதிகள் இல்லையா?

இதைப் பேசுகிற நாம் எப்படி பயங்கரவாதிகளாக முடியும்?

இந்தியப் பூணூலை உருவி விட்டுக் கொண்டு அமெரிக்கக் குல்லாய்களையும், கோட்டுகளையும் போட்டுக் கொண்டு அமெரிக்காவுக்கு அடிமைச் சேவகம் செய்கிறவர்களுக்கு வேண்டுமானால் அமெரிக்கா உறவாக இருக்கலாம். ஆனால் நமக்கு....?

அவர்கள் படிப்பதற்கும், வேலை செய்வதற்கும் அமெரிக்காவுக்குப் பறக்கிறவர்கள்.

அமெரிக்க அரசாங்கத்தின் பிச்சைக்காசை நக்கிப் பிழைக்கும் நாய்களால் அமெரிக்காவுக்கு வாலைக் குழைத்துத்தான் காட்ட முடியுமே தவிர குலைக்க முடியாது.

அவர்கள் அமெரிக்க விசுவாசிகள்.

சொந்த மக்களையும் நாட்டையும் விற்றுவிடுகிற அளவுக்கும், அந்த விற்பனையை எதிர்க்கிற சொந்த மக்களையே அடக்கி அழிக்கிற ஆளுமை வெறியர்கள் அமெரிக்க விசுவாசிகளாகத் தானே இருக்க முடியும்.

எனவே, அவர்களின் பின்னால் கைகட்டிக் கொண்டு அவர்கள் முணு முணுக்கிற வரிகளையே நம்மால் முணு முணுக்க முடியாது.

நாம் சாதியால், வாழ்க்கையால் அவர்களால் பிரிக்கப்பட்டவர்கள். எனவே அவர்களின் முணுமுணுப்பை நாம் ஏற்கமுடியாது.

அவர்களின் நண்பன் நமக்கு நண்பனாக முடியாது.

அவர்களின் உறவு நமக்கு எப்படி உறவாகமுடியும்.

அமெரிக்காவோடு இந்தியப் பார்ப்பனிய அரசு கொண்டிருக்கிற உறவு ஆதிக்கர்களுக்கு இடைப்பட்ட உறவு, 'விசுவாசம்'.

அதை நமக்கானதாகப் புரிந்து கொண்டால் ஏமாற்றமடைவது நாம்தாம்.

அமெரிக்கப் பொருள்களை விற்பனை செய்வதற்கும், கொள்ளை அடித்துக் கொழுப்பதற்கும் அமெரிக்காவுக்கு இந்தியா தேவை என்றால், இந்தியாவைப் பூணூலால் பிணைப்பதற்கும், சாதி மதவாதத்தைப் பேசிக் காப்பாற்றி அந்த அரசுக்கட்டிலில் தாம் ஏறி அதிகார வெறியாடுவதற்கும் இந்திய அரசாங்கத்திற்கு அமெரிக்காவின் துணை தேவை.



படிப்பகம்

www.padippakam.com

எனவே அவர்கள் கூடிக் கொள்ளவே செய்வார்கள்.

அமெரிக்காவில் வாழுகிற அடிமை மக்களுக்காக இந்திய அதிகார அரசு வருந்தமுடியாதது போலவே, இந்தியாவில் உள்ள அடிமை மக்களுக்காக அமெரிக்க வல்லாளுமை அரசு வருந்த முடியாது.

எனவே - அவர்களுக்கு மக்களைப் பற்றிக் கவலை இல்லை.

மக்களை ஆளவதைப் பற்றியே கவலை.

தாங்கள் மக்களை ஆளுவதற்கும், மக்களை அடக்கி வைப்பதற்கும், சுரண்டுவதற்கும் யார் யாரெல்லாம் தடையாக இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் அவர்களுக்கு எதிரிகள் தீவிரவாதிகள் - பயங்கரவாதிகள்.

எனவே, அவர்களால் பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள், அவர்களின் ஆதிக்கத்திற்கு எதிரானவர்கள், அவர்களின் கொள்ளைகளுக்கு எதிரானவர்கள்.

எனவே, அவர்களின் பயங்கரவாதிகள் நம்முடைய பயங்கரவாதிகளாக முடியாது.

சாதியச் சமூக அமைப்பைக் காப்பாற்றுகிற இந்தியப் பார்ப்பனிய அரசின் சாதித் திமிரை எதிர்க்கிறவர்கள் இந்திய அரசுக்கு எதிரிகளாக இருக்கலாம் - நமக்கு எப்படி எதிரிகளாக முடியும்.

அதுபோலவே, உலகைச் சுரண்டும் அமெரிக்காவை, உலகைக் கட்டி மேய்க்கும் அமெரிக்காவை எதிர்க்கிறவர்கள் அமெரிக்க அரசாங்கத்தினருக்கு வேண்டுமானால் பயங்கர வாதிகளாக இருக்கலாம் - நமக்கு எப்படி பயங்கரவாதிகளாக இருக்கமுடியும்.

சாதியால், வாழ்க்கையால் அடிமைகளாக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிற நாமும், ஆதிக்கச்சாதி - பணத்திமிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிற அதிகாரக் கூட்டத்தினரும் எப்படி ஒன்றாக முடியாதோ - அப்படி அந்த அதிகாரக் கூட்டத்திற்கான நண்பர்களும், எதிரிகளும் நமக்கான நண்பர்களாகவோ எதிரிகளாகவோ ஆகிவிட முடியாதல்லாவா.

அதுபோல்தான் உலகை ஆட்டிப் படைக்கும் அதிகாரக் கொழுப்பேறி இருக்கும் அமெரிக்காவின் நண்பனோ எதிரியோ நமக்கான நண்பனாக எதரியாக ஆகிவிடமுடியாது.

அமெரிக்காவின் பயங்கரவாதிகள் நமக்கான பயங்கரவாதிகளாக ஆகிவிட முடியாது.

தன் அதிகார நலனுக்கு இல்லை என்றால், தான் சுரண்ட முடியவில்லை என்றால் இன்றைக்கு ஆப்கானிஸ்தானை அழிப்பதுபோல் உலகையே அழிக்க எண்ணம் படைத்த அமெரிக்காவே பயங்கரவாதியாக இருக்கமுடியும்.

எனவே, தங்கள் வாழ்க்கையைச் சுரண்டும் அமெரிக்காவின் பொருளாதாரத்தை வீழ்த்துகிற முயற்சிகள் பயங்கரவாதத் தன்மை கொண்டதாகி விட முடியாது.

அமெரிக்காவின் படைவெறித் தளவாடங்களை அழிக்கிற முயற்சி பயங்கரவாதத்தின் முயற்சி என்று கூறிவிடமுடியாது.

அமெரிக்காவுக்குத் தேவை அதிகாரமும், சுரண்டலும்.

அமெரிக்காவை எதிர்க்கிறவர்கள் அமெரிக்காவின் சுரண்டலையும் , அதிகாரத்தையும்தான் எதிர்க்கிறார்களே அல்லாமல், அமெரிக்க மக்களை எல்லாம் அழிக்கும் நோக்கம் கொண்டவர்கள் அல்லர்.

ஆனால், அமெரிக்கா தன் அதிகாரத்தை எதிர்ப்பதை அமெரிக்க மக்களையே எதிர்ப்பதான மாயையை உருவாக்குகிறது.

அப்படி உருவாக்குவது மட்டுமல்ல அப்படி உருவாக்கி அதற்கு எதிரி என்று சொல்லி ஆப்கான் மக்களை எல்லாம் விரட்டி விரட்டி அழிக்கிறது.

அன்றைக்கு ஜப்பானின் இரோசிமா நாகசாகியில் அணுக்குண்டு போட்டு இலட்சக்கணக்கான மக்களைக் கொன்றது அமெரிக்கா.

வியட்நாம் மீது அணுக்கிருமிகள்குண்டுகளை வீசிப் பல இலக்கக்கணக்கான மக்களை அழித்தது அமெரிக்கா.

லெபானில், ஈராக்கில், எல்சல் வேடாரில், கியூபாவில்... அப்பப்பா இன்னும் எத்தனை நாடுகளில் அமெரிக்கா தன்கொலை வெறியாட்டங்களை ஆடி இருக்கிறது.

அப்படித்தான் இன்றைக்கு ஆப்கான் மக்களுக்கு உணவுப் பொருள் போடுவதாக ஏமாற்றி, அதைப் பொறுக்க வந்த குழந்தைகள் மீதெல்லாம் குண்டு போட்டுச் சாகடிக்கிறது.

ஏழைஎளிய நாட்டின் எறும்புச் சேர்க்கை போன்றதான உணவுக்கிடங்கில் உள்ள இலக்கக் கணக்கான கோதுமை மூட்டைகளையெல்லாம் குண்டு போட்டு எரிக்கிறது.

வெறி பிடித்தவனின் தாண்டவ ஆட்டமாய் அமெரிக்காவின் இந்தக் கோரச் செயல்களில் உள்ள பயங்கரவாதத்தை எதிர்ப்பது தானே நம் கடமையாக இருக்கமுடியும்.

அமெரிக்க வெறித்தனத்தை வீழ்த்தாமல் அடிமை மக்கள் எவ்வாறு விடுதலை அடைய முடியும். அமெரிக்கா எனும் ஆக்டோபசின் பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தாமல் நாம் விடுதலையைப் பெறமுடியாது.

சாதித் திமிரைக் கட்டிக்காக்கிற ஆதிக்கச் சாதித்திமிரை எதிர்ப்பது உண்மையானால், அது வரிந்து கட்டிக்கொண்டு ஆடுகிற இந்தியத்தையும், அதன் பார்ப்பனியத்தையும் எதிர்த்திடவேண்டும்.

இந்தியப் பார்ப்பனியம் அண்டி உறவுகொள்ளும் அமெரிக்காவையும் அதன் அடிவருடிகளையும் எதிர்த்திட வேண்டும்.

இந்துப் போர்வையிலிருந்து சாதியை எப்படி விடுவிக்க முடியாதோ அப்படி இந்தியப் போர்வையிலிருந்தும் சாதியை விடுவிக்க முடியாது. இந்தியத்தை எதிர்க்காமல் சாதியம் வீழாது போலவே, இந்தியத்தின் எசமான் ஆன அமெரிக்காவை எதிர்க்காமல் சாதியம் வீழாது.

அமெரிக்காவுக்கு அடிபணிபவன் இந்தியத்துக்கு அடிபணிந்தாக வேண்டும். இந்தியத்துக்கு அடிபணிபவன் சாதியத்திற்கும் அடிமைப்படுகிற அடிமைகள் அல்லாமல், அவன் சாதி ஒழிப்பு நோக்கமுடையவனாக இருக்க முடியாது.

எனவே, உலகம் முழுமையும் உள்ள பயங்கரவாதம் அமெரிக்காவின் பயங்கரவாதம் என்பதையும், இந்தியா முழுமையும் பரவி இருக்கும் பயங்கரவாதம் இந்தியப் பார்ப்பனிய பயங்கரவாதம் என்றும், தமிழக முழுமையும் பரவி இருக்கும் பயங்கரவாதம் இந்திய சாதிய பயங்கரவாதம் என்றும் புரிந்துகொள்வோம் - போராடுவோம். ●



படிப்பகம்

# ஆப்கானை அழிக்கும் அமெரிக்க ஆணவம்....

www.padippakam.com

அதிகாரத்தாலும், பண வலிமையாலும் ஐரோப்பிய நாடுகள் உலகை ஆளத் தொடங்கிய பின் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் உள்ள பழங்குடிமக்களினங்கள் பலவும் அடிமைப்பட்டுப் போயினர்

அடிமைப்பட்ட நாடுகள் அனைத்தும் ஒரே தரத்தின அல்ல. அவை வளர்ச்சி அளவில் ஏற்றத் தாழ்வைக் கொண்டனவாகவே இருந்தன.

அமெரிக்காவில் இன்றைக்கு விரட்டி அடிக்கப் பட்டிருக்கும் செவ்விந்தியர்களும், ஆஸ்திரேலியாவில் ஒடுங்கிக் கிடக்கும் பழங்குடி மக்களும் தங்களுக்கான வாழ்க்கையில் எத்தகைய அடித்தளமும் இல்லாமல் பழங்குடிகளாகவே மடிந்து கிடக்கின்றனர்.

ஆனால் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியிலும் வாழ்கின்ற பெருவாரியான பல்வகை இனமக்கள் தங்கள் இனத்தின் வாழ்வுரிமைக்காகவும், தங்கள் இனம் தனித் தேசிய இனமாய் வளர்ந்து அடிமைப் பட்டிருக்கிற போக்கிலிருந்து விடுதலை பெறவும், போராடிக் கொண்டிருக்கின்றனர்.

அவ்வகை இனமக்களும், தேசிய மக்களும் இன அளவிலும், நாட்டளவிலும் படுகிற அல்லல்கள் சொல்லி மாளாதவை.

அவ்வின மக்களின் உழைப்பையும், உயிர் வாழ்க்கையையும் இன்றளவிலும் தீர்மானிப்பவை உலக வல்லரசு நாடுகளே. உலகில் உள்ள பல இனமக்கள் வாழ் நாட்டினைச் சுரண்டிக் கொழுப்பதும், கனி வளங்கள், நீர் வளங்கள், விளைச்சல் வளங்களையெல்லாம் ஒட்ட உறிஞ்சிக் கொழுத்துத்திரிவதுவே அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் வாழ்க்கையாகப் போய்விட்டது.

உலகம் முழுக்கப் பட்டினிச்சாவுகளும், வாழ்க்கையை இழந்த தற்கொலைகள் ஏராளமாக நடப்பதற்கும் இந்த வல்லரசுகளின் வல்லாளுமை ஆதிக்கப் போக்குகளே பெருங்காரணமாகும்.

எத்தியோப்பியாவிலும், சோமாலியாவிலும், எல்சல் வேடாரிலும் நடந்த பட்டினிச் சாவுகளுக்கும், இங்கு ஒரிசாவிலும், ராஜஸ்தானிலும், தமிழ்நாட்டிலும் நாளும் நடந்துகொண்டிருக்கிற பட்டினிச் சாவுகளுக்கும் அந்த அதிகார வெறியர்களே பெரும் காரணம்.

இந்தச் சாவுகள் நடைபெற இயற்கையாக ஏதோ உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிடவில்லை. மழை பொழியாமல் தண்ணீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால், இவையெல்லாம் திட்டமிட்டு வல்லரசுகளால் உருவாக்கப் பட்டன. அரிசி, கோதுமை போன்ற விளைச்சல்களைச் சுரண்டி அடைத்து வைத்துக்கொள்வதும், இனி புதிதாகப் பெருமளவில் விளையாமல் போவதற்கு வீரியவித்து களைப் பயன்படுத்தி இயல்பான விதைகளை அழிப்பதும் வல்லரசின் சூழ்ச்சியே. விளைச்சலுக்கு விதை தேவை என்றால் அவர்களையே நாம் கையேந்தி நிற்கிறபடி செய்துவிட்டன அவ்வல்லரசுகள்.

மழை பொழிந்தாலும் தண்ணீரைக் தேக்கிப் பயன்படுத்துவது எனும் நிலையை மாற்றி, ஏரி, குளங்களில் சீமைக் கருவேலங்களை நட வைத்து அந்த ஏரிகள் மேடுதட்டிப் போகும்படி செய்ததோடு பொழிகிற மழை நீரை முழுக்கக் கடலில் கலக்க வைத்த கொடுமை அந்த வல்லரசுகளையே சார்ந்தது. எனவே இன்றைக்குக் குடி நீருக்குக் கூட 'அக்குவா' தண்ணீர் என்றும், 'கின்லே' தண்ணீர் என்றும், அமெரிக்கா - பிற வல்லரசுகளிடமே நாம் பணம்கொடுத்து தண்ணீர் வாங்கிக் குடிக்கிற கொடுமையை என்னவென்று சொல்வது.

அதோடு, சொந்தமாக இந்த நாடுகளில் தொழில் செய்யவிடாமல் வல்லரசுகள் தம் தொழிலகங்களை இந்த நாடுகள் முழுக்கத் திறந்துவிட்டிருக்கின்றன.

சொந்தத் தொழில் இல்லாததால், சொந்த வருவாய் இல்லை.

எனவே - விற்பனை ஆகிற பொருளின் இலாபங் களை முழுக்க அவர்களே கொள்ளையடித்துச் செல்கிறபோது எப்படி சொந்த நாடு வளம் பெறும்.

அவர்களின் தொழிலுக்கான கல்வியும், அந்தக் கல்வியை அவர்கள் மொழியிலேயே தருவது என்றும், நம் நாட்டு மக்களைக் கல்வி வழியிலும், மொழிவழியிலும் வல்லரசுகளுக்கென அடிமைச் சேவர்களாகவே மாற்றி இருக்கின்றனர்.

இதுவும் போதாதென்று, வல்லரசுகளின் கலாச்சாரங் களைத் திணித்து - ஏழை நாட்டுமக்களின் மூளைகளில் வல்லரசுகளின் அழுக்கைப் பூசியதோடு - அவர்களே தங்களின் இன, வாழ்க்கை மரபுகளை இழித்து எண்ணுகிற படியான மூளைச் சலவையையும் வல்லரசுகள் செய்து வருகின்றன.

இத்தகைய போக்குகள் வழி அடிமைப்பட்ட நாடுகள், நூற்றுக்கணக்கில் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், இலத்தின் அமெரிக்கப் பகுதிகளிலும் உழன்று கொண்டிருக் கிற கொடுமைகளை என்னவென்று சொல்வது.

அதுமட்டுமல்லாமல் இத்தகைய கொடுமைகளைக் கண்டு எழுச்சி கொள்ளுகிற மக்களைச் சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும், இனத்தின் பெயராலும் பகுப்பதும், ஒருவருக்கெதிராக மற்றவரை மோத வைப்பதும், அந்த வல்லரசுகளின் ஆளுமைத் தந்திரமாகவே போய்விட்டது.

அத்தகைய அடக்குமுறைகளுக்கு இன்றைக்கு மற்ற நாட்டினப் போராட்டங்களைப் போலவே இன்னும் சொன்னால் கூடுதலாக நசுக்கப்பட்டுக் கொண்டிருப்பது ஆப்கானிஸ்தானியப் போராட்டமே ஆகும்.

ஆப்கானிஸ்தானம் இன்றைக்கு எப்படியான ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கிறது என்பதாக நமக்குத் தெரியுமோ - அதைக் காட்டிலும் ஆப்கானிஸ்தான் பன்மடங்கான அடக்குமுறை வரலாற்றைக் கொண்டது.

பாக்கிஸ்தானுக்கு மேற்கு வடக்குப் புறங்களிலும், சோவியத்து இரஷ்யாவின் தெற்குப் புறத்திலும், ஈரானின்



படிப்பகம்

www.padippakam.com

கிழக்குப் புறத்திலுமாக அமைந்திருக்கிற ஆப்கானிஸ்தானின் பரப்பளவு ஏறத்தாழ ஆறரை இலக்கம் சதுர கிலோ மீட்டர்.

அங்கு ஏறத்தாழ இரண்டு கோடி அளவிலேயே உள்ள அந்த நாட்டு மக்கள் இசுலாமிய மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் புஸ்து, தாரி, பாரசீகம் ஆகிய மொழிகளைப் பேசுபவர்களாகவும், மூன்று வகைப்பட்ட மக்களினங்களாகவும் மற்றும் அண்டை நாட்டு மக்களினங்களின் பரவலுக்கிடையிலும் வாழ்ந்து வருகின்றனர்.

வறண்ட நிலப்பகுதியான ஆப்கானிய மேற்குப்பகுதி முழுக்கப் பெரும் மலைத் தொடர்களாக விளங்குபவை.

அன்றைக்கு ஆரியர்கள் நுழைந்து வந்த 'கைபர்' கனவாய் ஆப்கானின் காபூலுக்கு அருகில்தான் இருக்கிறது.

கால்நடை மேய்ப்பதும், தோல்வணிகம் செய்வதும், குறைந்த அளவே உழவு செய்வதுமே ஆப்கானிய மக்களின் தொழில்.

பெட்ரோல் எனப்படும் கன்னெய் ஓரளவு இங்கும் கிடைப்பதால் அதை ஒட்டிய சுரங்கத் தொழிலும் ஓரளவு இங்கு உண்டு.

இருப்பினும் ஒப்பீட்டளவில் மிகவும் ஏழை நாடுதான் ஆப்கானிஸ்தான். பெருமளவு கல்வியோ அல்லது மிகப் பெரும் வசதி வாய்ப்புகளோ அங்கு இல்லை. 20 விழுக்காட்டிற்கும் குறைந்த மக்களே இங்கு கல்வி அறிவு பெற்றுள்ளனர். இந்த மக்களின் சராசரி வாழ்க்கைக் காலமே 40 ஆண்டுகள் தாம்.

இத்தகைய நெருக்கடிகளுக்கு இடையில்தான் நசுங்கிய நிலையில் இருக்கும் ஆப்கானிய மக்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகவே இருக்கிறது.

வணிக வழியிலும், சுரண்டல் அளவிலும், பிரிட்டனுக்கு அடிமைப்பட்ட ஆப்கானிய மக்கள் பிரிட்டனைத் துரத்தி அடிப்பதற்காகக் கடுமையாகப் போராடினர். 1840களிலும், 1880-களிலுமாக இரண்டுமுறை பிரிட்டனுக்கு எதிரான போரில் பிரிட்டன் தோற்கடிக்கப்பட்டது.

ஆனால், அதைத் தொடர்ந்து பழமைவாதமும், மதவாதமும் ஒன்றுசேர்ந்த நிலையில் இருந்த ஆப்கானிய அரசுகளுக்கு எதிராக இராணுவ எழுச்சியின் வழி நூர் முகமது தராகி என்பவர் ஆப்கானிய அதிபராகிறார். மார்க்சிய வழிப்பட்ட அரசாக இவர் அமைத்த அரசிற்கு நெருக்கடி வரவே அதற்குப் பக்கபலமாக சோவியத்து ஒன்றியம் தன் படையை ஆப்கானுக்கு அனுப்பி இருந்தது.

சோவியத்து ஒன்றியத்தை வீழ்த்த அமெரிக்கா சோவியத்து ஒன்றியத்திற்குள்ளாகவே செய்த பல்வேறு அழிவு முயற்சிகளோடு ஆப்கானிஸ்தானிலுள்ள சோவியத்துப்படையை விரட்டவும் பாக்கிஸ்தான் வழி கடுமையாக முயன்றது.

சோவியத்து ஆதரவு அரசுக்கு எதிராக முஜாஹிதினின் தாக்குதலுக்கு அமெரிக்கா பெருமளவு உதவியது. தொடர்ந்து பாக்கிஸ்தான் வழி பின்லேடனுக்கும் அது உதவத் தொடங்கியது.

பின்லேடன் அடிப்படையில் சவுதி அரேபியாவைச் சார்ந்தவராக இருந்தாலும், பாக்கிஸ்தானுக்கு வந்திருந்த ஆப்கானிய அகதிகளைச் சந்தித்துப் பேசி சோவியத்துப் படையை வீழ்த்துவதற்கு என தன் முயற்சியில் ஆப்கானிய இசுலாமியர்களைக் கொண்டு படைகளைக் கட்டத் தொடங்கினர்.

இதற்குப் பாக்கிஸ்தானும், பாக்கிஸ்தான்வழி அமெரிக்காவும் பெருமளவு உதவி செய்தன.

சோவியத்தின் படை 1989-இல் ஆப்கானைவிட்டுச் சென்றபின்னர், சோவியத்து ஆதரவு அரசை வீழ்த்தவும், தொடர்ந்து ஆப்கானிஸ்தானைக் கட்டுக்குள் வைத்திருக்கவும் தாலிபான் என்கிற ஆப்கானிய மாணாக்கர்களைப் பெருமளவு கொண்ட இயக்கம் கட்டப்பட்டது.

அவ்வியக்கம் கடுமையான சட்டதிட்டங்களுக்குள் ஆப்கானைக் கட்டுப்படுத்தி வளர்த்ததுடன் - உலகளவில் இஸ்லாமியர்க்கு எதிராகக், குறிப்பாக இந்தோனிசியாவிலும், வளைகுடா நாடுகள் மீதும், லெபனான் மீதும் நடத்தப்பட்ட போர்களைக் கண்டு அமெரிக்காவைத் தீவிரமாக எதிர்த்தது.

எனவே, அமெரிக்காவிற்கு எதிரான செயற்பாடுகளைத் தொடர்ந்து அது செய்யத் தொடங்கியது.

இந்த நோக்கில்தான் **1993**-இல் அமெரிக்காவின் உகை வணிகக் கட்டிடத்தின்மீது குண்டுவீசியதும்,

**1994**-இல் பிலிப்பைன்ஸ் நாட்டின் வானூர்தி நிலையத்தைத் தாக்கியதும்,

**1995**-இல் எத்தியோப்பியாவில் எகிப்திய குடியரசுத் தலைவர் முபாரக்கைக் கொலை செய்யமுயன்றதும்,

**1996**-இல் சவூதி அரேபியா படைத்தளத்தில் இருந்த அமெரிக்கப் படையினரைக் குண்டுவழித் தாக்கிக் கொன்றதும்,

**1998**-இல் கென்யா, நைரோபியா, தார்இஸ்சலாம், தான்சானியா ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதுவரகங்களில் குண்டு வீசித் தாக்கியதும்,

**2000**-இல் ஏமன் நாட்டில் அமெரிக்கக் கடற்படையைச் சார்ந்த மாலுமிகளைக் கொன்றதுமாக 'அல்கொய்தா' (என்கிற 'அடித்தள') அமைப்பு செயல்பட்டது.

அச்செயல்களின் தொடர்ச்சியே கடந்த **11.9.2001**-இல் அமெரிக்க நியூயார்க் நகரில் உலக வணிகக் கட்டிடங்களைத் தகர்த்ததும், அமெரிக்கப் படைத்தளமான பென்டகனைத் தாக்கியதும் ஆகும்.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட உயிர் இழப்பு மிக அதிகமானது என்பது உலக மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருந்தாலும், அந்த உலக வணிகக் கட்டிடத்தினாலும், பென்டகனின் படைத் தளத்தினாலும் அமெரிக்காவுக்கு மிகப் பெரும் பொருளியல் வீழ்ச்சியே ஏற்பட்டது.

அதுமட்டுமல்லாமல் உலகம் முழுக்க தன்னை மீறுபவர் எவரும் இல்லை என்றும், தட்டிக் கேட்க



படிப்பகம்

www.padippakam.com

எவருக்கும் திறன் இல்லை என்பதுமாகத் திமிர் கொண்டிருந்த அமெரிக்காவிற்குப் பெரும் அதிர்ச்சியையே தந்தது.

எனவேதான் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளுவது போலவும், தம்மைத் தாக்குகிற எந்த நாடுகளுக்கும் ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்த வேண்டுமான போக்கிலும் ஏறத்தாழ 50000-கோடி ரூபாய் இழப்பிலான திட்டமாக ஆப்கானிஸ்தானை எதிர்த்துப் போரைத் தொடங்கி இருக்கிறது அமெரிக்கா.

ஏழை நாடான ஆப்கானைத் தரைமட்டமாகத் துடைத் தெரிகிற பெரும் கொடும் போரை ஈவு இரக்கமில்லாமல் நடத்துகிறது அமெரிக்கா.

வெறிபிடித்த யானைக் கூட்டம் - சுண்டெலிகளை, நசுக்குகிற கொடுஞ் செயலாய் அமெரிக்கா - ஆப்கானை எதிர்த்து நசுக்கத் தொடங்கி இருக்கிறது.

உலகம் முழுமையும் உள்ள பயங்கரவாதத்தை நசுக்குவதாகக் கூறி, ஏழை நாடுகளை எல்லாம் சட்டாம்பிள்ளைத்தனமாக ஏய்க்கிறது அமெரிக்கா.

அவ்வகையில் மைய கிழக்காசிய நாடுகளின் வாழ்க்கைத் தேவைக்கான அனைத்துப் பொருள்களையும் தாமே இங்கு எடுத்துச் சென்று விற்று அந்த நாடுகளையே பொருளியல் வழி அடிமைப்படுத்தி வைத்திருப்பவையே இந்த வல்லரசு நாடுகள்தாம் - இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் அமெரிக்காதான்.

எனவே, இந்த நாடுகள் எல்லாம் எக்காலத்தும் அரசியல் வழியாக ஒன்றிணைந்துவிடக் கூடாது என்பதற்கும், தங்களுக்குள் நட்பு கொண்டு விடக்கூடாது என்றும் அமெரிக்கா செய்கிற பிரித்தாளுகிற சூழ்ச்சியும், அரசியல் வழிச் சண்டையிட வைப்பதும் மிகுதி.

அத்தகைய சண்டைகளை ஏற்படுத்துவது மூலம் அந்த நாடுகளின் ஒற்றுமையைக் குலைப்பது ஓர் ஊதியம் எனில், அந்த நாடுகளுக்குத்தன் பழைய போர்க் கருவிகளை விற்பது என்பது இன்னும் பெரிய ஊதியமாகும்.

இதற்கிடையில் இசுரேலை முழுமையான பக்கத் துணையாக வைத்துக் கொண்டு இஸ்லாமிய நாடுகளை மிரட்டுகிற பயங்கரவாதியாகவே அமெரிக்கா தொடர்ந்து செயல்பட்டு வருகிறபோது, ஏதுமற்ற ஏழ்மை நாடான ஆப்கானிஸ்தான் எப்படி பயங்கரவாத நாடாக முடியும்.

ஆனால் அமெரிக்காவின் இத்தகைய சட்டாம்பிள்ளைத் தனத்தையும், சதிகாரப் போக்கையும் கண்டித்து மதத்தின் பேரால் ஒருங்கிணைந்திருப்பதே 'அல்கொய்தா' இயக்கம்.

அல்கொய்தா இயக்கமோ, அல்லது தலிபான் அரசோ ஒரு புரட்சிகர தன்மையுடையன அல்ல. அவை முற்போக்கு உணர்வுடையனவும் அல்ல.

ஆனால் ஆப்கானிய மக்களுக்கும் சரி, உலகம் முழுமையும் இன்றைக்குப் புறநிலையில், மதத்தின் பேரால் இரண்டாந்தர மக்களாகத் தள்ளப்பட்டிருக்கும் இசுலாமிய மத மக்களும் சரி தங்கள் மதத்தின் வழியாகத் தாங்கள் புறக்கணிக்கப் படுகிறபோது, இரண்டாந்தர மக்களாகப் புறந்தள்ளப்படுகிறபோது, அந்த மதத்தின் மக்களாகவே அவர்கள் ஒன்று சேர்கிற சூழல் ஏற்படுகிறது.

அத்தகைய சூழலிலேயே பின்லேடன் - இசுலாமிய மக்களால் புதிய தலைவராக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

பின்லேடன் - இசுலாமியரை விடுவிக்க வந்தவர் அல்லர்.

இன்றைக்கு அமெரிக்காவை எதிர்க்கிற அவரின் போக்கு சரியானதாக இருந்தாலும், அமெரிக்காவின் பொருளாதார, ஆதிக்கத்தையும், சுரண்டலையும் அந்நாடுகளிலிருந்து துடைத்தெரிந்துவிட்டு, ஒரு சுய பொருளாதாரக் கட்டமைப்புக்காக அந்நாடுகளை வளர்க்கிற திட்டம் எதுவும் அவரிடம் இல்லை.

மேலும் உலகம் முழுவதிலும் தன் வணிகச் சந்தையை விரித்து, உலக மயமாக்கல் எனும் பெயரில் கொள்ளையடித்துக் கொழுக்கும் காரணத்திற்காக அமெரிக்காவின் உலக வணிகக் கட்டிடங்களை பின்லேடனின் அல் கொய்தா அமைப்பு தகர்த்துவிட்டது என எண்ணமுடியாது.

அந்த அமைப்பிற்கு உலக மயமாக்கல் குறித்தோ, நகரமயமாக்கல் குறித்தோ ஆன வல்லரசு நாடுகளின் பொருளியல் சுரண்டல் பற்றியோ அதை எதிர்த்திடல் வேண்டுமான திட்டம் குறித்தோ அக்கறை இருந்திட வில்லை.

அப்படிச் செய்வது என்பதையே அவர் ஒப்புக் கொள்பவராக இல்லாதபோது, அவர் எப்படி இசுலாமிய ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை மீட்பவராக இருக்கமுடியும்.

கடந்த காலங்களில் அமெரிக்காவோடு உறவு கொண்டிருந்த பின்லேடன் - அமெரிக்காவுக்கான கூலியாக அல்லவா செயல்பட்டிருக்கிறார்.

அதுபோன்றல்லாமல் இசுலாமிய மக்களின் வாழ்வு உரிமைக்காக அமெரிக்க - பிற வல்லரசுகளின் ஆதிக்க வெறியை அடியோடு விரட்டி அடிப்பதான ஆப்கானிய மக்களின் வேட்கைக்கு அம்மக்களின் முழு விடுதலையில் அக்கறை கொண்ட கொள்கையும், அதை நடைமுறைப் படுத்துகிற தலைமையுமே அமெரிக்க ஆணவத்தை வீழ்த்தவும், ஆப்கானை விடுதலை செய்யவும் செய்யும்.

ஆனால் அப்படியான நிலை திடுமெனத் தோன்றி விட முடியாது.

அது, இன்றைய அளவில் இஸ்லாமிய மத உரிமைகளுக்கு குரல் எழுப்புகிற எழுச்சியில் தோன்றியே படிப்படியாகவே வளரமுடியும்.

அவ்வகையில், அப்படியாக வளர்ந்திருக்கிற அல்கொய்தா இயக்க ம் இன்றைக்கு உறுதியோடு போரில் ஈடுபட்டாலும், அதன் உள்நோக்கமான வல்லரசிய எதிர்ப்புகளில் உறுதி வாய்ந்ததாக இல்லை.

அத்தகைய உறுதியுடன் உருத்திரட்டி வளர்க்க வேண்டிய கடமை உலகளவில் விரிந்திருக்கிற பொதுவுடைமை இயக்கங்களுக்கே இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# பொடோ எனும் பயங்கரவாதம்!

"பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மாநில முதல்வர்களுக்குக் கிடைத்த ஆயுதம்தான் பொடோ, ஆனால் இந்தச் சட்டத்தைப் பயன் படுத்த மாநிலங்களை நிர்பந்திக்க மாட்டோம், இதனால் இந்தியக் குடிமகன்களின் உரிமை பாதிக்கப்படாது" என்கிறது இந்திய அரசு.

இதேபோல் இராஜீவ்காந்தி இறப்பின்போது 1990-இல் நடைமுறைப்படுத்தப்பட்ட 'தடா'ச் சட்டம் தமிழக மக்களை, அதன் உரிமைக்காகச் சிறைபடுத்தலாம் என்ற நடைமுறையோடு ஒரு வெறியாட்டத்தை நடத்தி, இன்றும் பலரை 'தடா' கைதிகளாக்கி ஒடுக்கியுள்ளது. இதை அன்றைக்கு மனித உரிமை அமைப்புகளும், முற்போக்கு அமைப்புகளும் எதிர்த்ததன் விளைவாக 'தடா' தகர்க்கப்பட்டது. 'தடா நீக்கப்பட்டாலும் இன்றைக்கு அதன் மறு வடிவமாக அதைவிடக் கொடுமையான கூறுகளை உள்ளடக்கிப் 'பொடோ' என்கிற சட்டம் விரைவில் மக்களை நசுக்க இருக்கிறது என்பதே உண்மை.

இப்படி, அவசர அவசரமாக இந்திய அரசால் கொண்டு வரப்பட இருக்கிற இந்தச் சட்டத்தின் பின்னணி என்ன என்று பார்க்கிற போது, இந்திய அரசு தன்னை தக்க வைத்துக் கொள்ள, இன்றைக்கு உலகநாடுகளை உயிர்பலி வாங்கிக் கொண்டிருக்கிற, பயங்கரவாத அமெரிக்காவோடு உறவு வைத்துக் கொள்ளவே, இந்தப் 'பொடா'வைக் கொண்டுவர உள்ளது என்பதை அறியலாம்.

இந்த 'பொடோ' (POTO) என்கிற சொல்லின் விரிவாக்கம். Prevention of Terrorism Ordinance எனவும், இது சட்டமாக்கப் படும்போது (POTA) Prevention of Terrorism Act எனவும் இருக்கிறது. இதனுடைய விதிகள், ஒவ்வொருவரின் அடிப்படை உரிமை எனக் கூறப்படுகிற பேச்சுரிமை, எழுத்துரிமை, வாழ்வியல் உரிமை போன்ற உரிமைகளையே கடுமையாக ஒடுக்கும் என்பதில் ஐயமில்லை.

தேசிய உரிமைபற்றிப் பேசினாலோ, எழுதினாலோ, அல்லது இந்திய அதிகாரத்திற்கும் வல்லரசியத்திற்கும் எதிராக ஒருவர் எந்த உணர்வை வெளிக்காட்டினாலோ, அல்லது அரசுக்கு அதுபற்றிய சந்தேகம் எழுந்தாலோ அவர்களைப் 'பொடோ' சட்டத்தின் கீழ் கைது செய்யலாம். தகவல் பரிமாற்றங்களில், (ஈ மெயில், தொலைபேசி, பத்திரிகை வழியில்) எந்த ஐயங்கள் எழுந்தாலும் அவர்களைச் சோதனை செய்யவும், கைது செய்யவும் இச்சட்டம் வழி கொடுக்கிறது.

'இம் என்றால் சிறைவாசம்' 'ஏன் என்றால் வனவாசம்' என்கிற வெள்ளையர் ஆட்சி முறையைக் கண்முன் காட்டியதுபோல, மிசாவும், தடாவும், மக்களை ஒடுக்கிப் பிறகு, இன்று அதன் வடிவங்கள் மட்டுமே மாற்றியப்பட்டிருப்பதற்கும் பொடோ ஒரு சான்று.

இந்தியப் பாராளுமன்றத்தால் 'பொடோவை'ச் சட்டமாக நிறைவேற்ற வேண்டிய தேவையை விட, இன்றைக்குப் பா.ஜ.க.வும், பார்ப்பன அதிகார வகுப்புகளும், உடனடியாக, அமிர்தசரசில் கூட்டம்போட்டும் கொள்கை விளக்கக் கூட்டம் நடத்தியும் இச்சட்டத்தைக் கொண்டுவர என்ன தேவை? இந்தியத்தைக் காட்டிக்காக்கவும், இந்து வெறி உணர்வை வலுப்படுத்தி இசுலாமியர்களை, சிறுபான்மையினரை, தேசிய உரிமை கோருவரை ஒடுக்க வேண்டும் என்பதற்கே என உணர முடிகிறது.

உலகெங்கிலுமுள்ள உரிமைகோருவர்களை ஒழிப்பதற்காக இச்சட்டம் இங்கு மட்டுமல்லாமல் அனைத்து நாடுகளிலும், பல வடிவங்களிலும் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தியப் 'பொடோ' சட்டத்தை போலவும், பல கூறுகளை ஒத்த சட்டம் கனடாவின் சட்டம். அதன் பெயர் "தேசியப் பாதுகாப்புச் சட்டம்" (National Defence Act). தேசியப் பாதுகாப்புச் சட்டம் (National Security Act 1980) போலவும் கனடாவின் உள்ள இந்தத் தேசிய பாதுகாப்புச் சட்டம் வெளிநாடுகளுக்கிடையிலான எந்த வழியிலான தகவல் பரிமாற்றங்களையும் இடைமறித்து அறியவும். அத்தகவல்களை விசாரணை செய்யவும் காவல்துறை அதிகாரிகளுக்கு, அதைப்பற்றி அறிந்த எவரேனும் தகவல் கொடுக்காமல் இருப்பார்களானால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவுமான கூறுகளைக் கொண்டுள்ளது.

இப்படி, கனடாவின் சட்டம் போலவே அண்மையில் அமெரிக்கா - பயங்கரவாதிகளை ஒடுக்க Uniting and Strengthening America by providing Appropriate Tools required to Intercept and Obstruct Terrorism Act என்கிற சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் சுருக்க வடிவம் "PATRIOATACT" எனப்படும். தேசபக்தச் சட்டம் என்பதாகும். இதன் பொருள் "பயங்கரவாதத்தை இடைமறிப்புச் செய்வதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும் தேவைப்படும் பொருத்தமான கருவிகளை வசதி செய்து கொடுக்கும் சட்டம்" என்பதாகும்.

இப்படி, வல்லரசிய வெறிச் செயல்களுக்கு உடன்பட்டுப் போகிற சட்டமாகவே, வல்லரசியச் சட்டங்களின் மறுவடிவமாகவே தான். "பொடோ" இருக்கிறது.

இது அடிப்படையில், தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு என்று கூறப்படலாம், அப்பணி இசுலாமிய மக்களை மட்டுமின்றி இந்தியப் பார்ப்பனிய ஆதிக்கத்திற்கு எதிரான உணர்வாளர்களுக்கு எதிரான சட்டமாகவே பயன்படுகிறது.

இப்படி தன் வல்லாண்மை உலகெங்கிலும் பரவிட ஆதிக்கம் செலுத்துகிற அமெரிக்காவுடன் கைகோர்க்கும் வகையில், இந்திய ஆதிக்க அரசும் நம் மீது 'பொடோ' போன்ற சட்டங்களை திணித்துக் கொண்டே இருக்கிறது. இத்தகைய சட்டங்களை ஏதோ சட்ட மறுப்பு என்கிறபடியோ, மனித உரிமைச்சிக்கல் என்பதுபடியோ மட்டுமல்லாமல், இந்திய அதிகார வெறி அரசக் கட்டமைப்பையே எதிர்ப்பதன் வழியே எதிர்க்க முடியும். எனவே இந்தியப் பார்ப்பனியத்தை எதிர்க்காமல் பொடோவை எதிர்க்க முடியாது - என்கிற அரசியலை உணருவோம்.



படிப்பகம்

# நகர, ஊராட்சி தேர்தல்கள் - யாருக்காக...?

www.padippakam.com

நம்முடைய தமிழ்நாடு முன்னேற வேண்டுமானால் நாட்டிலுள்ள மக்களும், மக்கள் வாழும் கிராமங்களும் முன்னேற வேண்டும். நம்முடைய தமிழ்நாடு சிறிய சிறிய கிராமங்கள் உள்ளடக்கிய ஒரு பெரிய கிராமம். இங்கு 80 விழுக்காட்டு மக்களின் தொழிலாக இருப்பது உழவு.

தமிழ்நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பார்ப்பன இந்துத்துவ அரசு (இந்திய அரசு) நீர் வளங்களையும், நிலவளங்களையும் கனிம வளங்களையும், தமிழ்நாட்டிலிருந்து தனக்கே உரிமை என்று ஆதிக்கம் செலுத்திக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது.

இந்தக் கொள்ளைகள் எல்லாம் இந்த மக்கள் அறியாவண்ணம், பக்தி, மதம் தீவிரவாதம், எல்லாம் இறைவன் செயல் என்று இந்த மக்களை முட்டாள்களாக்கி முழுமையான இந்துத்துவ அரசை நிறுவ முயற்சி செய்துக் கொண்டிருக்கிறது இந்திய அரசு.

இம்முயற்சியின் விளைவாகத் தமிழ்நாட்டில் அவர்கள் அடிக்கின்ற கொள்ளையை இந்த மக்கள் உணரா வகையில் இந்திய அரசு என்கின்ற மத்திய அரசு இருந்தால்தான் இங்குள்ள கிராமங்கள் சீர்படும் என்கின்ற சிந்தனையை இங்குள்ள மக்களிடம் ஆழமாகப் பதித்து வைப்பதற்கான திட்டம் தான் கிராம ஊராட்சிகள் (பஞ்சாயத்து) திட்டம்.

இந்த மண்ணிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறியதும் காந்தியும் நேருவும் மற்றும் பல பார்ப்பனியர்கள் இந்தியா என்கின்ற இந்தக் கட்டமைப்பு எப்பொழுதும் உடைந்துவிடக் கூடாது என்பதற்காக அரசர் ஆட்சி காலத்தில் இருந்த குடவோலை முறை அடிப்படையில் உள்ளாட்சி அமைப்பை ஏற்படுத்தி அதில் சில உரிமைகள் மட்டும் மாநில அரசுகளுக்குக் கொடுத்து இதன் மூலம் நிலையான மாநில ஆட்சியர் அதிகாரத்தை மத்திய அரசின் கீழ் கொண்டுவந்தது.

கிராம ஊராட்சிகள் திட்டம் என்பது மக்களுக்குச் சேவை செய்கின்ற திட்டமாக இருந்தாலும் அடிப்படை உள்ளடகத்தில் இத்திட்டம் மாநிலங்களுக்கான உரிமையை கொஞ்சம் கொஞ்சமாக நீக்கி மத்திய அரசுக்குக் கொண்டு வருபவையும் தமிழ் நாட்டின் வளங்களைச் சுரண்டி எடுக்கின்ற உள்ளடக்கத்தையே கொண்டுள்ளது. சுயநிர்ணய உரிமை, தன்னுரிமை, தமிழ்நாடு தமக்கே, தமிழக விடுதலை என்ற கருத்துகள் தோன்றுகிறபோது இத்தகு கருத்துகளை வளர விடாமல் தடுப்பதற்காகவும் தமிழக மக்களை மத்திய அரசு மீது நம்பிக்கை வைக்கின்ற சிந்தனையை தூண்டுகின்ற உத்தியாகவும்தான் கிராம நகர ஊராட்சிகள் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

1996க்கு முன் உள்ளாட்சி அமைப்பின் ஒரு சில அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் இருந்ததனால் தேவை என்கின்ற பட்சத்தில்தான் உள்ளாட்சி தேர்தலை நடத்துவார்கள். ஆனால் இப்போது 1996ஆம் ஆண்டு உள்ளாட்சி தேர்தல் (74) சட்டத் திருத்தத்தின் படி உள்ளாட்சி தேர்தலை எல்லா மாநிலங்களும் நடத்தியே ஆகவேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்துகிறது.

இந்திய ஊரக வளர்ச்சி துறை அமைச்சரான வெங்கைய்யா நாயுடு கடந்த காலங்களில் ஊராட்சி தேர்தல்கள் எந்தெந்த மாநிலங்களில் நடத்தப்பட வில்லையோ அந்த அந்த மாநிலங்களுக்கு மத்திய அரசு தரும் நிதி உதவி தரமாட்டோம் என்று எச்சரிக்கை விடுத்தார். அதனுடைய அடிப்படையில் தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது.

மத்திய அரசு ஒவ்வொரு திட்டத்தை அறிவிக்கும்போதும் அந்தந்த தேசிய இனங்களின் மொழியைத் தவிர்த்து இந்தி, சமஸ்கிருதம் கலந்த பெயரிலே அறிவிக்கின்றது.

(எ.கா) பாரத பிரிதன் கிராம சமிதி யோஜனா

(பாரத பிரதம கிராம சரணகர் மேம்பாடு திட்டம்)

இப்படி ஒவ்வொரு துறையிலும் மற்ற மொழிகளைத் தவிர்த்து மத்திய அரசு ஆதிக்கம் செலுத்தும் வகையில் திட்டங்களை அறிவிக்கின்றன.

தமிழ் நாட்டில் கொள்ளையடித்துச் செல்லுகின்ற நிதியில் 70 விழுக்காட்டுப் பணத்தை மத்திய அரசின் பெயரில் வைத்துக் கொண்டு 30 விழுக்காட்டுப் பணத்தைத் தமிழ்நாட்டிற்குத் தரும்போது நெருக்கடிகளுடன் கூடிய கட்டளைகளைப் பிறபித்து மத்திய அரசு மட்டுமே தன் சொந்த பணத்தைத் தருவது போன்ற திட்டங்களாகவே இருக்கவேண்டுமென்று கட்டளையிடுகின்றன.

வேலை வாயப்பு உறுதியளிப்புத் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், ஜவகர் கிராம சமிதி யோஜனா, 10வது 11வது நிதிக்குழுத் திட்டம் இதுபோன்ற ஏராளமான திட்டங்களை மத்திய அரசு தன் பெயரிலே மத்திய அரசுக்குட்பட்டுச் செயல்படுத்துகின்றது.

உள்ளாட்சித் தேர்தலை இரு கூறாக பிரிக்கலாம் நாட்டுபுறங்களில் உள்ள அமைப்புகளாகிய

(i) ஊராட்சி, வட்டார வளர்ச்சி (ஊராட்சி ஒன்றியம்) மாவட்ட ஊராட்சி ஆகிய மூன்று அமைப்புகள் ஒரு கூறாகவும்

(ii) நகர்புற உள்ளாட்சி அமைப்புகளாகிய பேரூராட்சி, நகராட்சி மாநகராட்சி ஆகிய மூன்றுவகை அமைப்புகள் மற்றொரு கூறாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

1996க்கு முன் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் கிராம ஊராட்சிகளில் ஊராட்சி அமைப்பு என்ற ஒரு பகுதி மட்டுமே இருந்தது.

1996க்குபின் உள்ளாட்சிச் சட்டத் திருத்தத்தின்படி ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஊராட்சி என்று கூடுதலாகி மூன்றடுக்கு முறைகொண்டு வந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

கிராம ஊராட்சிகளில் மத்திய அரசு தன் இயக்கத்தை அங்குள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமும் நகராட்சி, மாநகராட்சி ஆகியவை ஆளுநர்கள் கட்டுபாட்டிலும், இப்படி எல்லா நிலைகளிலும் ஒவ்வொரு கட்ட இயக்கத்திலும் நேரடியான மத்திய அரசின் தலையீடு இல்லாமல் நடைபெறாத வகையில் மத்திய அரசே ஆட்சியின் கீழ் அனைத்தையும் கொண்டு வந்துள்ளது.

தமிழகத்தில் எந்தவித புரட்சியும் நடைபெறா வண்ணம் கவனித்துக் கொண்டு அப்படி எங்காவது பிரச்சினை என்றால் தாங்களும் உதவி செய்கிறோம் என்று கூறிக் கொண்டு அப்பிரச்சினையை அரசுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாமல் அப்பிரச்சினை அடக்கப்பட்டு மறைந்து போகும்படியான வேலையைச் செய்து கொண்டிருக்கும் அரசு தரகர்களான சுய நிதி உதவிக் குழுக்கள் (அரசு சாரா நிறுவனங்கள் இவைகளை ஊக்கப்படுத்துகின்ற வகையிலும் மக்களோடு தொடர்பு ஏற்படுத்துகிற வகையிலும் சுய வேலைவாயப்புத் திட்டம், அதற்கான பயிற்சித் திட்டம், மகளிருக்கான கடனுதவி, மகளிர் தொழில் செய்வதற்கான உதவி போன்ற திட்டங்களை இந்த சுயநிதி உதவி குழுக்களிடம் ஒப்படைத்து அவர்கள் செய்யும் படியான வேலையை மத்திய அரசு செய்கிறது. அவ்வேலையை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செய்வதற்கு மிக எளிதாக அமைகிறது.

இதனால் சுய உதவிக் குழுக்கள் மீதும், உள்ளாட்சி அமைப்புகள் மீதும் அதன்மூலம் மத்திய அரசு மீதும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும்படி வழிவகை செய்கிறது. அந்தந்த மாவட்ட சுயநிதி உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து மாவட்ட அளவிலான அமைப்பாக்கி அதன் தலைவராக மாவட்ட ஆட்சி தலைவரே ஏற்று வழி நடத்துகிறார்.

இந்த நிலை தொடர்ந்து செல்லுமேயானால் தமிழ் நாட்டு அரசுருவாக்கத்தின் மீதான நம்பிக்கை தமிழக மக்களுக்கு இருக்காது. தமிழகம் முழுமையும் இந்துத்துவ இந்தியப் பார்ப்பனிய அரசின் கீழ் என்று மொத்த வளங்களையும் சீரழித்துக் கொள்ளையடித்துச் சென்று விடுவார்கள். இங்குள்ள தமிழக உழைக்கும் மக்களாகிய நாம் வாழ்வதற்கான நிலையே பறி போய்விடும்.

ஏற்கனவே கல்வித்துறை, உள்துறை, தொழில்துறை, போக்குவரத்து நெடுஞ்சாலைத் துறை என்று ஒவ்வொரு துறைகளையும் இந்திய அரசு தன் நேரடிக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்ததோடு, இந்த ஊராட்சி அமைப்பின் இயக்கமுறைகளையும் தன் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறது.

இதன் மூலம் தனித்தனித் தேசிய உணர்வுகளை அழிப்பதும் இந்துத்துவப் பார்ப்பனிய, சாதிய அமைப்பு முறையை வலுப்படுத்திக் கொள்வதுமே இந்திய அரசின் அடிப்படை நோக்கமாகிவிட்டது.

எனவே, இந்த உள்ளாட்சித் தேர்தல்கள் என்பவையும் இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கே பயன்படுகிறதே அல்லாமல் தமிழக மக்களுக்கானது அல்லது.

தமிழக மக்களின் வாய்களில் ரொட்டுத் துண்டுகளைச் செருகி வைத்து விட்டு, தமிழகத்தையே உருவிக் கொள்ளையடிக்கும் இந்த அமைப்பு முறை எதிர்க்கப்பட வேண்டியதே ஆகும்.

இது, மொழிவழி மாநிலங்களின் தன்னுரிமைகளை மறுத்து இந்தியப்படுத்துகிற அணுகுமுறையைக் காட்டிலும் கொடுமையானது என்பதை நாம் ஆழ்ந்து உணர்தல் வேண்டும். ●

## செய்தி ஊடகங்களில் வல்லரசுகளின் வலுவும் அடிமைநாடுகளின் மெலிவும்

உலகத்தைத் தன் ஒற்றை அறைக்குள் கொண்டு வந்திருக்கின்றன வல்லரசுகள்.

தொலைக்காட்சிகளின், கணிப்பொறிகளின் ஆட்சி பெருமளவு அதிகமாகி விட்டாலும், அவை அனைத்தும் அரசியல் வாதிகளுக்கு இடைப்பட்ட சண்டைகளில்தான் வேறுபட்ட அணிகளில் இருக்கின்றனவே அல்லாமல், வல்லரசுகளின் சுரண்டலையோ அதன் அதிகாரத் திமிர் போக்குகளையோ கண்டிக்கிற வகையில் அமைந்தவையாக இல்லை.

ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதலைப் பற்றிய செய்திகளில் அமெரிக்காவின் ஆணவத்தையோ, வல்லரசு நாடுகள் எப்படி ஏழ்மை நாடுகளை நசுக்கின்றன என்பது குறித்தோ எந்தத் தொலைகாட்சியும் செய்தியை ஒளிப்பரப்பிடவில்லை.

ஆக, அனைத்துமே வல்லரசுகளின் ஊது குழல்களாகவே செயல்படுகின்றன.

அதுமட்டும் அல்லாது, பின்லேடனின் நேர்காணலை ஒளிபரப்பிவிட்டன என்பதற்காக அமெரிக்கத் தொலைக்காட்சி நிறுவனங்கள் அனைத்தும் கட்டுப்பாட்டுடன் செய்திகளை வெளியிட வேண்டும் என்றும், பின்லேடனின் நேர்காணல்களை நேரடியாக ஒளிபரப்பக்கூடாது என்றும் அமெரிக்க அரசு வலியுறுத்தி இருக்கிறது.

அத்தகைய கட்டுப்பாடுகளை உலகம் முழுக்க உள்ள தொலைக்காட்சி நிறுவனங்கள் ஏதோ தங்களுக்கே சொல்லப்பட்டதாய் எண்ணிக் கொண்டு அனைத்தும் வாய் மூடிக்கொண்டன.

மைய கிழக்கு ஆசியப் பகுதியில் இருக்கும் கத்தார் நாட்டிலிருந்து ஆல்-ஜஸீரா எனும் தொலைக்காட்சியே தொடர்ந்து பின்லேடனின் நேர்காணலை ஒளிபரப்பவும், ஆப்கானில் உள்ள போர் நிலைகளைப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் இயங்குவதை அமெரிக்கா நெருட்டியுள்ளது.

'ஆல் – ஜஸீராவை அடக்கி வைக்குமாறு அமெரிக்க வெளியுறவுச் செயலர் காலின் பவல் – கத்தர் மன்னரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆக ஆப்கான் போரைப்பற்றிய திறனாய்வுகளே கட்டுப்படுத்தப்படுகிறபோது அமெரிக்க வல்லாளுமைப் போக்கைப் பரப்புவதற்கு எந்த உரிமைகளையும் அவர்களின் ஜனநாயகம் மறுக்கிறது.

அப்படியாக அவர்களின் சுரண்டல் வெறியையும், அதிகாரத் திமிரையும் வெளிப் படுத்தி ஒளிபரப்புவது பயங்கரவாதத்துக்குத் துணைபோவது என்று இழித்துச் சொல்கின்றது அமெரிக்கா.

ஆனால், அத்தகைய வெளிப்பாடுகளை அடக்குகிற வல்லாதிக்கர்களாகவே அவர்கள் இருப்பதை நாம் உணர்தல் வேண்டும்.

வல்லரசுகளின் ஆணவங்களுக்கு எதிராக விடுதலை எழுச்சியாளர்களின் செய்தி ஊடகங்கள் வளர்க்கப்படவேண்டும்.

வல்லரசிய செய்தி ஊடக வலிமை அறுத்தெரியப்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# “சங்கரப் பல்கலைகழகத்தைத் தடைசெய்! சாதிவெறியன் சங்கரச்சாரியைக் கைது செய்!” மிதிவண்டிப் பேரணி – பொதுக்கூட்டம்

மாந்த சமூகம் தொடங்கி, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மாற்றத்திற்குள்ளாகி, நாகரீக பண்பாட்டு வளர்ச்சியை தன்னளவிலே வளர்த்துக்கொண்ட போதும் அதன் நாகரீகப் பண்பாட்டுக் கூறுகள் மாந்த இனத்துக்குள்ளே ஏற்றத்தாழ்வுகளுடனே வளர்க்கப்பட்டது. அந்த வகையில் மனித அறிவு வளர்ச்சிக்குக் 'கல்வி' பெரும் அடிப்படை. அந்தக் கல்வியும் ஆதிக்க நிலையினர்க்கும் உழைக்கும் மக்களுக்கும் என ஏற்றத்தாழ்வுகளுடன் வளர்க்கப்படுகிறது.

இயற்கையை வழிபட்டு வாழ்ந்த மக்களை, ஆரியப்பார்ப்பனக் கூட்டம், வருணாச்சிரம கருத்துகளைக் கொடுத்து, சாதிக்கொரு தொழில் என வேறுபடுத்தி, தன்னுடைய பார்ப்பனிய வல்லாண்மையை நிலைநாட்டி வளர்த்து “உலகின் எந்த உயர்ந்த ரக சோப்புப் போட்டுக் குளித்தாலும் தாழ்த்தப்பட்டவர்களின் தீட்டு அழியாது” என வேதாந்தம் பேசும் இன்றைய சங்கரமடத்தின் ஆதிக்கக்குரல் அன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்களை கல்வி, சமூக, பண்பாட்டு வழிகளில் இழிவுபடுத்தி ஒடுக்கியது.

“பொற்காலம் எனச் சொல்லப்படுகிற குப்தர்கள் காலம் என்பது, பார்ப்பனர்களுக்கான, பொற்காலமாகவே இருந்தது. தீண்டத்தகாதோர் தெருவில் நடந்து செல்லும் போது செருப்பணியக் கூடாது எனவும், பெண்கள் மேலாடை அணியக் கூடாதெனவும், படித்தால் காதில் ஈயம் காய்ச்சி ஊற்றவேண்டும் என்பதுமான ஒடுக்குமுறைகள் பார்ப்பனர்களால் புகுத்தப்பட்டன.”

சமூக மாற்றங்களில் ஒரு பக்கம் வளர்ந்தேறிய நாகரிக, பண்பாட்டுக் கூறுகளைத் தனக்கான ஆளமைக்கூறுகளாக மாற்றிக்கொண்டவர்கள், கல்வி முறையிலும், வேதம் ஓதுகிற பிரம்மன் முகத்திலிருந்து தோன்றியதாகக் கூறப்படும், பார்ப்பனர் மட்டுமே வேதம் ஓதுகிற தொழிலை செய்யவும், கல்வி கற்கவும் வேண்டும்; மற்ற சாதியினர் அவரவர்கள் வருணாச்சிரம முறைப்படி அவரவர் குலத்தொழிலைச் செய்யவேண்டும் என்றனர்.

இந்த முறையிலேயே 'கல்வி' அனைவருக்கும் ஏற்றத்தாழ்வுகளுடனும் மறுக்கப்பட்டுவந்த சூழல் இன்றைக்கும் ஆதிக்க வர்க்க, பார்ப்பனர்களால் கட்டிக்காக்கப்பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 'மண்டல கமிஷன்' ஒரு படிநிலை வளர்ச்சியைக் கொடுத்தாலும், பார்ப்பனர் அதிகாரங்கள் சாதி வேறுபாட்டை, கல்வி நிலையங்களிலும் புகுத்தாமல் இல்லை. 'விதியா பாரதி', கேந்திர வித்யலாயா போன்ற பார்ப்பனியக் கல்வி நிலையங்கள், மேட்டுக்குடி, மற்றும் அதிகார வெறிபிடித்த பார்ப்பனர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமாகவே இருக்கிறது.

இந்த வழியிலேயே அண்மையில் சங்கராச்சாரியரின் “சங்கரப் பல்கலைக்கழகம்” என்று காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இது நிறுவப்பட்டதன் அடிப்படை நோக்கம் கூட, மனித உரிமை, சமூக சமத்துவ உரிமை, அரசியல், பொருளியல் உரிமை இவற்றை நோக்கி உழைக்கும் மக்களை ஒன்று சேரவிடாமல் இருப்பதற்கு அவர்களின் சிந்தனையை கல்வி எனும் போர்வையில் இந்துமத வெறியைப் பயன்படுத்தி அதன் மூலம் இந்துத்துவ அரசை நிறுவுவதன்வழி தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் என்பதை உணர்த்துகிறது.

அப்படிப்பட்ட இந்து ஆதிக்க வெறி பிடித்த சங்கரமடம் உருவாக்கியுள்ள சங்கரப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் அணி சேர்க்கையிலிருந்து அவர்கள் கல்வி முடித்து பட்டம் பெறும் வரை, சாதி வேறுபாட்டு அடிப்படையில், கல்வி முறைகளை நடத்திக் கொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கென்று ஒரு பட்டப்படிப்பு, பார்ப்பன மாணவர்களுக்கென்று வேறு படிப்பு முறையும் எனக் கல்வியையே சாதி அடிப்படையில் பிரித்து வைத்துள்ளது. மேலும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஒரு விடுதியையும், பார்ப்பன மாணவர்களுக்குத் தனி விடுதியும் கொடுத்து, கல்வி நிலையங்களிலும் தீண்டாமை ஒடுக்குமுறையை நடைமுறைப் படுத்தியுள்ளது. பயிற்சிக் கட்டணங்களும், இரு வேறு முறைகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படி, தன்னுடைய ஆதிக்க நிலைகளினால் எந்தத் தளத்திலும், சாதி வெறியோடு, ஆதிக்கம் செய்து கொண்டிருக்கும், பார்ப்பனர்களின் தலைமையிடமான சங்கர மட சங்காரச்சாரியை கைது செய்யக் கோரியும், அந்த சங்கரப் பல்கலைக்கழகத்தைத் தடைசெய்யக் கோரியும்,



படிப்பகம்

www.padippakam.com

த.ஒ.வி.இ. சார்பில் மிதிவண்டிப் பேரணியும், பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது.

"சாதிக்கொரு கல்வி! சாதிக்கொரு விடுதி! சாதிக்கொரு நீதி!

சங்கரமட பல்கலைகழகத்தை தடைசெய்!

சாதிவெறியன் சங்கராச்சாரியை கைது செய்!!"

என்கிற முழக்கத்தோடு சோளிங்கரில் 29.9.2001 காரியன்று பகல் 11.30 மணியளவில் மிதிவண்டிப் பேரணி தொடங்கியது. பேரணியை மா.பெ.பொ.க. தோழர். **முகிலன்** அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் உரையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பார்ப்பனியத்திற்கு எதிராக அணி சேர, வேண்டிய அவசியத்தை விளக்கினார். சுமார் 60 மிதிவண்டிகளில் 80 பேருடன் தொடங்கிய பேரணி சோளிங்கர் நகர் முழுக்க சுற்றி, பின்னர் அரக்கோணம் சாலை வழியாக செல்கையில் பாண்டியநெல்லூரில் தோழர் பழனி அவர்கள் எலுமிச்சை சாறு கொடுத்தார். பின்னர் அப்படியே ஊருக்குச் சென்றது பேரணி. அங்கு அம்பேத்கர் மன்றத்தின் சார்பாக தோழர்களின் களைப்பை நீக்க சாறு கொடுத்துப் பேரணியை வாழ்த்தினர். அன்று பகல் 3.00 மணியளவில் பாராஞ்சி த.ஒ.வி.இ கிளை சார்பாக பகலுணவு ஏற்பாடு செய்யப்பட்டுருந்தது. பகலுணவிற்குப் பின்னர் சாலை-யில் அய்யா ஆசீர்வதம் அவர்கள் பேரணியை வாழ்த்திப் பேசினார் தோழர். அன்புநிதி அவர்கள் அனைவருக்கும் தேநீர் கொடுத்து வரவேற்றார். இவ்வூர்களில் த.ஒ.வி.இ. சார்ந்த தோழர்கள் சிவா, பொழிலன், இளங்கோவன் ஆகியோர் பேரணியை விளக்கி பேசினர். பாண்டியநல்லூர், அய்ப்பேடு, சோதிபுரம், பாராஞ்சி வழியே வந்த மிதிவண்டி பேரணி. மாலை 6.00 மணியளவில் அரக்கோணம் சென்றடைந்தது பேரணி அரக்கோணம் நகரைச் சுற்றி முழக்கங்களுடன் சென்று எசு.ஆர். கேட்டில் நிறைவடைந்து. அங்கு அன்று இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்குத் தோழர். கரடிப்பட்டி கண்ணன் அவர்கள் தலைமையேற்றார் அக்கூட்டத்திற்கு த.ஒ.வி.இ. தோழர் பாலகிருட்டிணன் வரவேற்புரை வழங்கினார்.

இறுதியாகத் தோழர் யுவராசு அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற முதல்நாள் பேரணி மிகுந்த எழுச்சியுடன் நிறைவு பெற்றது. அதில் பல்வேறு இயக்கங்களை சார்ந்த தோழர்களான இரகு, ஆகியோர் பேசினர். த.ஒ.வி.இ. சார்பாக தோழர் இளங்கோவன் பேசினார் அவரது உரையில் த.ஒ.வி.இ. முன்னெடுத்த சங்கரமட இடிப்புப் போராட்டம், சாதிக்கொடூரனை எரிக்கும் திருவிழா போன்ற போராட்டங்களுக்கு அரக்கோணத்திற்கும் உள்ள தொடர்பையும் சங்கர பல்கலை கழகத்தில் நடக்கும் சாதிவெறித்தனம், தீண்டாமை குறித்தும் விளக்கினார். கூட்டத்தின் சிறப்புரையாளராகச் சொல்லாய்வறிஞர் அருளியார் தம் உரையில் பார்ப்பனிய எதிர்ப்பு, அவை தமிழ் சொற்களில் பொதிந்துள்ளதையும் ஆய்வுவழி எடுத்துரைத்தார் மேலும், நடுவணரசு அப்பல்கலைக்கழகத்திற்குச் செய்யும் செலவுகளையும் அது தரும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறினார்.

இரண்டாம் நாள் பேரணி முதல் நாள்போல் எழுச்சியுடன் கிளம்பி இடையில் உள்ள ஊர்களின் பேருந்து நிலையங்களில் நின்று நின்று முழங்கிவந்தது. பேரணி குறித்து விளக்கி தோழர்கள் கயல், பொழிலன் இளங்கோவன் ஆகியோர் பேசினர். இடையில் தக்கோளத்தில் அம்பேத்கர் மன்றத்தின் சார்பில் தோழர் இரகு அனைவருக்கு பகலுணவு ஏற்பாடு செய்திருந்தார்.

பிறகு, தக்கோலம், பள்ளூர், திருமால்பூர் வெள்ளைகேட் ஆகிய ஊர்களின் வழியாகச் சென்று மாலை 5.00 மணியளவில் காஞ்சி நகரை அடைந்தது. ஒவ்வொரு ஊரிலும் த.ஒ.வி.இ. தோழர்கள் இப்பேரணி குறித்து விளக்கிப் பேசினர். காஞ்சி நகர் முழுவதும் தோழர்கள் விண்ணதிர காஞ்சி சங்கரப் பல்கலைக்கழகத்தைத் தடை செய்யவும், சாதிவெறியன் சங்கராச்சாரியைக் கைது செய்யவும் கூறி முழக்கமிட்டனர். இடை இடையே பேரணியே விளக்கித் தோழர்கள் கயல், பொழிலன், சிவா, இளங்கோவன் ஆகியோர் பேசினர். இறுதியாக பேரணி காஞ்சி இரட்டை மண்டபத்தை வந்தடைந்தது. பேரணியின் முடிவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு த.ஒ.வி.இ.யின் ஒருங்கிணைப்பாளர் தோழர் இளங்கோவன் தலைமையேற்றார். கூட்டத்தில் தக்கோலம் அம்பேத்கர் மன்றத்தின் சார்பில் தோழர் இரகு, அம்பேத்கர் பாசறை சார்பில் தோழர் செல்வராஜ், மா.பெ.பொ.க சார்பில் தோழர் வாலாசா வல்லவன், தமிழ்நாடு இளைஞர் பேரவை சார்பில் தோழர் தமிழ் முகிலன், தஒ.வி.இ. சார்பாகத் தோழர் பொழிலன் ஆகியோர் பேசினர். இறுதியாகத் தோழர் தியாகு அவர்கள் தமிழ்நாட்டின் அரசியலையும், சாதிஒழிப்பில் தாழ்த்தப்பட்டோரின் பங்கினையும் சங்கரமட பல்கலைகழகத்தின் தீண்டாமைகொடுமையையும் குறித்து விரிவாகப் பேசினார்.

இவ்வாறாக த.ஒ.வி.இ. முன்னெடுத்த இந்த மிதிவண்டி விளக்கக் கூட்டம் சிறப்புற நடைபெற்றது. இப்பேரணியில் கொடைக்கல் அம்பேத்கர் மன்றம், அய்ப்பேடு அம்பேத்கர் மன்றம், பாராஞ்சி அம்பேத்கர் மன்றம், மக்கள் எழுச்சி மன்றம், அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம் போன்ற பல்வேறு இயக்கத் தோழர்கள் பங்கு பெற்றன. காஞ்சிபுரத்தின் மா.பெ.பொ. கட்சித் தோழர்கள் பேரணிக்காகவும், காஞ்சிபுரம் பொதுக் கூட்டத்திற்காகவும் பெருமளவு துணை நின்றனர். ●

படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கா ஆப்கானிய போர்த் தளவாடங்கள் — ஒரு பார்வை

ஏழை நாடுகளின் முதலாளிய உற்பத்தியை முழுமையாகத் தடை செய்திருக்கின்றன வல்லரசுகள். வல்லரசு நாடுகளின் உற்பத்திப் பொருளுக்கான சந்தைகளாக இருக்கவே ஏழை நாடுகள் கட்டாயப்படுத்தப் படுகின்றன.

வல்லரசுகளின் மூலப்பணத்தில் தொழிலகங்களைத் திறப்பதும், குறைவான கூலிகளுக்கு ஆட்களைப்பிடிப்பதுமான வகையில் ஏழைநாடுகளின் உழைப்பும், உற்பத்தியும் வல்லரசுகளால் சுரண்டப்படுகின்றன.

மேலும் – உற்பத்திப் பொருள்கள் என்பவைகூட ஏதோ இந்த ஏழை நாடுகளுக்குத் தேவைப்படுகிற பொருள்கள் என்பதோடு நின்றுவிடுவதில்லை.

இந்த ஏழ்மை நாடுகளுக்குள் பகைமையை மூட்டிவிட்டு அவை தாக்கிக்கொள்ள தேவைப்படுகிற போர்க்கருவிகளையும் வல்லரசுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றன.

ஆக–இத்தகைய நடைமுறைகளால் வல்லரசுகள் இரட்டை ஊதியமே அடைகின்றன.

முன்பு இலங்கை அரசுக்கும், ஈழவிடுதலை இயக்கங்கள் பலவற்றுக்கும் இடையில் திம்புவில் பேச்சுவார்த்தை நடத்திய இந்தியஅரசு தொடர்ந்து ஈழவிடுதலை இயக்கங்கள் பலவற்றுக்கும் சூழ்ச்சியாகக் கருவிகளைக் கொடுத்ததுடன், அந்தக் கருவிகளைக் கொண்டு மாற்று அமைப்பினரை எதிர்த்து வந்தால்மேலும் கருவிகள் தருவதாகக் கூறி இயக்கங்களை ஒன்றோடொன்று மோதவிட்டதும், அப்படி மோதிக் கொள்ளுகிற அமைப்புகளுக்குக் கருவிகளைக் கொடுத்து வளர்த்ததுமான போக்கைக் கடைபிடித்தது.

இதன் மூலம் விடுதலை இயக்கங்களை நசுக்குவதும், போர்த் தளவாடங்களை விற்பதுவும் என அவற்றுக்கு இரட்டை ஊதியமே.

இந்தியாவின் இத்தகைய போக்கே வல்லரசுகளின் பிரித்தாளும் சூழ்ச்சியிலிருந்து கடைபிடிக்கப்பட்ட நடைமுறையாகும்.

இத்தகைய நடைமுறையையே வல்லரசு நாடுகளும் குறிப்பாக அமெரிக்காவும் தொடர்ந்து செய்கின்றன.

இன்றைக்கு, ஆப்கானிஸ்தானை அழித்து கொண்டிருக்கிற அமெரிக்கா தன்னுடைய பழமையான கருவிகளைப் பயன்படுத்தவும், புதிய கருவிகளைப் பயன்படுத்திப் பார்க்கவுமான வகையிலும் இப்போரைச் செய்கிறது.

உலக அளவில் அமெரிக்காவின் புதிய புதிய போர்த்தளவாடங்களை எளிய நாடுகளுக்குக் காட்டி போர்க் கருவிகளை விற்பனை செய்வதற்கான சந்தையாகவும் அமெரிக்கா இந்தப் போரைப் பயன்படுத்துகிறது.

அதுமட்டுமல்லாமல், உலக அளவில் தன்னைத் தட்டிக் கேட்க எவருமில்லை என்கிற திமிரில் கடந்த காலங்களில் அமெரிக்கா பயன்படுத்திய கருவிகள் வெறுமனே வெடிப்புக் கருவிகள் மட்டுமல்ல.

நச்சுகளைப் பரப்பவும், நோய்களை உருவாக்கவுமான குண்டுகளை வீசுகிற முறைகளையும் அமெரிக்காவே வளர்த்தது.

ஜப்பானில் அணுகுண்டுகளை வீசி பல்லாயிரம் மக்களைக் கொன்றதுடன், இன்றளவிலும் ஜப்பான், இரோசிமா, நாகசாகியில் குழந்தைகள் நலிவுடனே பிறக்கிற வகையில் செய்திருப்பதும் அமெரிக்காவே ஆகும்.

அதேபோல், பிளேக், டெங்கு போன்ற காய்ச்சல்களைப் பரப்பியதும், எய்ட்ஸ் போன்ற நோய்களைப் பரப்பியதும் இந்த வல்லரசுகளே என்பதை அவை மறைத்துவிட முடியாது.

போபாலில் விஷவாயுவைக் கக்கிப் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்தது, அமெரிக்காவின் யூனியன் கார்பைடு தொழிலகங்களே அல்லாமல் வேறல்ல.

அந்த வகையில் இன்றைக்கு ஆப்கான் மக்களை அழிக்க முனைந்திருக்கிற அமெரிக்காவே 'ஆந்திராக்ஸ்' – போன்ற பல்வேறு நோய்க் கிருமிகளைப் பரப்புவதும், அந்தப் பழியை ஆப்கான் மீது போடுவதும் அமெரிக்காவின் ஆதிக்க வெறிப்போக்கையே காட்டுகிறது.

ஆப்கானின் வடக்குப் பகுதியில் இருக்கிற சிறுபான்மை இன மக்களுக்குப் போர்க்கருவிகளையும், பிற அனைத்து ஊட்டங்களையும் செய்து, தெற்குப் பகுதி மீது போரிடத் தூண்டி துணை நிற்கிறது அமெரிக்கா.

இத்தகைய ஆதிக்க வெறிபிடித்த அமெரிக்காவின் படைபலம், ஆப்கானின் படைபலத்தோடும் அல்லது ஏழைநாடுகளின் படைபலத்தோடு ஒப்பவைத்து எண்ணத் தகுந்தது அல்ல.

அந்த வகையில் இன்றைக்கு ஆப்கான்மீது அமெரிக்கா தொடுத்திருக்கிற போரில் அமெரிக்கா பயன்படுத்தும் போர்க்கருவிகளையும், நலிவுற்ற ஆப்கான் பயன்படுத்தும் போர்க் கருவிகளையும் ஒப்புநோக்குதல் வேண்டும்.

'உழைக்கும் மக்கள் தமிழகம்' 57, இராசகோபால் தோட்டம், கருங்கல்பாளையம், ஈரோடு–3.

படிப்பகம்